# தமிழர்களின்

482

# 57ன் நடவடிக்கை

# என்ன?

ளர்ப்பு நூற்பதிப்புக் கழகம்

ப. :: மதுரை.

தமிழர்களின்

# '57-ன் நடவடிக்கை என்ன?

(இன்றைய தமிழர்களின் பேச்சு, மனப்பான்மை. எண்ணம். கருத்து: கோள்கை, செயல்பற்றிய அற்புதமான தோரு வியாக்கியானம்,)

ஆசிரியர்: "சதா"

(எழுதியது.)

தமிழன் வளர்ப்பு நூற்பதிப்புக் கழகம்.

கோம்பை. :: மதுரை.

482

173 NS 679

விலை ரூபாய் 1—4—0.

கிடைக்குமிடம்:-

தமிழன் வளர்ப்பு நூற்பதிப்புக் கழகம்,

கோம்பை. மதுரை மாவட்டம்.

# பொருளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | 1 |
| முன்னுரை | 5 |
| காலமும் தமிழர்களும் | 13 |
| தமிழர்களும் அவர்கள் பேச்சுக்களும் | 31 |
| தமிழர்களும் அவர்கள் எண்ணங்களும் கருத்துக்களும் | 58 |
| தமிழர்களும் அவர்கள் கோள்கைகளும் செயல்களும் | 85 |

# இந்நூலாசிரியரின் நூல்கள்.

1. நாமெங்கே வள்ளுவரெங்கே!
2. ஆரம்பப் பொதுக்கல்வி
3. தமிழர்களின் '57ன் நடவடிக்கை என்ன?
4. தமிழர்களின் தரித்திரம்
   (கட்டுரைகளின் தொகுப்பு)
5. மனிதனை உருவாக்கும் சூழ் நிலைகளின் அலங்கோலம்
6. மகானின் சிந்தனையும் செயலும்
7. சமுதாயத்தில் ஒருவன்
8. வருமானம் குறைந்தவரின் இல்லங்கள்
9. மக்கள் கற்பித்த பாடம்
   (சிறுகதைகளின் தொகுப்பு)
10. கொள்கையில்லாத செயல்.
    (சிறுகதைகளின் தொகுப்பு)
11. கசப்பும் சித்தாந்தமும்
12. இந்தியன்

( அச்சில் )

# பதிப்புரை

இந்நூல்—'தமிழர்களின் 57ன் நடவடிக்கை என்ன?' என்பது தமிழ் இலக்கியத்தில் ஒரு புதுமை. புதுமை கிடக்கட்டும் என்றால், விடுப்போம். ஆனால் இந்நூல் பேசும் விஷயங்கள் அத்தனையும், ஒவ்வொன்றும் தமிழர்கள் இன்றே ஆராய்ந்து முடிவுகாண வேண்டியவை என்பதை உணராமலிருக்க முடியாது.

இந்நூல் பேசும் விஷயங்கள் அத்தனையும் இன்றே ஆராய்ந்து முடிவு காணவேண்டியவை என்பதை நாம்—'தமிழன் வளர்ப்புக்கழக'த்தார் உணர்ந்தோம். எங்கள் நோக்கத்துக்கு உகந்ததாக இருக்கவே வெளியிடத்துணிந்தோம். இந்நூல் தமிழன் வளர்ச்சிக்கு உதவக்கூடும் என்பது எங்களது துணிபு.

நூலாசிரியர் பற்றி இவ்வுரையில் குறிப்பிட வேண்டும். நூலாசிரியர் நேர்மை நிறைந்த துணிவுகொண்ட ஒரு தீவிர முற்போக்காளர். இவர், தமிழ் எழுத்தாளர்கள் அநேகமாக எல்

லோருமே கொண்டுள்ள கருத்துக்களுக்கு பல விஷயங்களில் மாறுபட்ட கருத்துக்களைக்கொண்டுள்ளார். உதாரணத்திற்காக ஒன்று காட்டலாம் திருக்குறள் நூல் பற்றி ஏனைய எழுத்தாளர்கள் கொண்டுள்ள கருத்துக்கு நேர்மாறுபட்டதாக இருக்கிறது, இவர் கொண்டுள்ள கருத்து

இந்நூலில் சர்ச்சைக்கிடமான விஷயங்களையே பெரிதும் பேச எடுத்துககொண்டுள்ளார்; சிலவற்றை நம்மவர் நாமே ஏற்படுத்திக்கொண்டதாகக் குற்றம் சாட்டுகிறார். இவர்தமிழனைப் புகழ்ந்து அவன் பெருமை சொல்லி ஓரிடத்திலும் பேசிச்செல்லவில்லை எவ்விடத்தும் இந்நூல் முழுதும்! இஃது இவரது புதுமையான போக்கு என்றுதான் சொல்லவேண்டும் ஏனையவர் இவ்வாறில்லாதமட்டில். தமிழனுக்கென எழுதப்படும் நூலில் தமிழன் பெருமைகளை ஏன் பேசவேண்டும் என்பது இவரது கேள்வி போலும்.

புகழ்ந்து பேசாத இத்தன்மைக்கு மாறாக, தமிழனிடம் காணக்கிடக்கும் குறைபாடுகளை அலக்கு அலக்காகப் பிரித்தெடுத்து வைக்கிறார் இவர். இவ்வேலையிலும் இவர் ஏனையவர் காணாத சில குறைபாடுகளையும் கண்டெடுத்துக் காட்டுகிறார். அதே நேரத்தில் ஏனையவர் செய்யும்

தவறையும்- அவர் மூடி மறைக்கும் விஷயங்களை யும் அம்பலப்படுத்துகிறார். திருக்குறள் கருத் துக்கள் மக்கி மண்ணாகிச் சாரமிழந்து காலத்துக் கொவ்வாமல் போனதையும் இதனை மூடிமறைக்க அறிஞர்களும் நூலாசிரியர்களும் நிமிடத்துக்கு நிமிடம் உரைகள் எழுதிக்கொண்டே போவதை யும் வெண்ணெளியில் காட்டுகிறார்.

இதில் இவரது தீவிரப்போக்கு பாராட்டத் தக்கது என்று நாம் தமிழனை வளர்ப்பதே நோக் கமாகக்கொண்டோர் கருதுகிறோம். ஆனால் அது பலருக்குக் கசப்பாக இருக்கலாம் என்ன செய்ய லாம். நோயுள்ளோருக்குத்தானே மருந்து தேவை மருந்தை உண்பவர்தானே அதன் கசப்பையும் சகிக்கவேண்டும். மருந்துகள் பெரும்பாலும் கசப் பாகவே அமைந்துவிடுகின்றனவே, என்ன செய்ய லாம். இந்நூலாசிரியரிடம் ஒரு குணம் உண்டு: கசப்பான உண்மையை பகிரங்கமாக வெளியிட்டு விடுகிறார்; இதற்கும் என்ன செய்யலாம், இஃது இவரது இயல்பு போலும். ஆனால் இவர்கூறுவதும் உண்மைகளாகவே இருக்கின்றனவே. உண் மைக்கு மாறுபட்டதாக இருந்தாலல்லவோ ஏதும் பேசுதல் கூடும்.

ஆனால் தமிழர்கள் ஒன்று செய்தல் இயலும் 'எவனும் என்னவும் பேசட்டும்' என்று மனத்துள்ளெண்ணி அறியாதார்போலிருந்துகொண்டு பழைமையைப் பிடித்துத்தொங்கிக்கொண்டிருந்து விடமுடியும் சில நாட்களுக்கேனும். ஆனால் இவ்வாசிரியரும் இவர்களுக்கு மத்தியில் சிலநாட்களுக்கேனும் வாழ்ந்துகொண்டிருக்கத்தான் போகிறார்; இப்போதும் வாழ்ந்துகொண்டுதானிருக்கிறார்.

இதைக்காட்டவே இப்படியொருவர் நம்மிடையே இருக்கிறார் என்பதைக்காட்டவே இந்நூலை வெளியிடுகிறோம்.

**தமிழன் வளர்ப்புக்கழகத்தார்.**

# முன்னுரை

யான் ஆசிரியர் வேலையை வேண்டாவென விடுத்து இல்லம் அடைந்தேன்; எனக்கு ஓய்வு கிடைத்தது. ஓய்வு நாட்களில் வழக்கம்போல் யான் பத்திரிகை பார்ப்பதுண்டு; போதிய நேரம் கிடைத்தலால் செய்தித்தாளை ஊன்றிப் படிப்பதுமுண்டு. சாதாரணமாக நாட்டின் நடப்பை அறியப் பத்திரிகை பார்க்கப்புகுந்த என்னைப் பத்திரிகைச் செய்திகள் நாட்டின் நடப்பு பற்றி ஆராய்ச்சி நடத்தச்செய்தன.

என்னை ஆராய்ச்சி நடத்தத் தூண்டிய செய்திகள் பிற நாட்டுச் செய்திகள் இல்லை; நமது தமிழ்நாட்டுச் செய்திகள். குறிப்பாகக் கூறினல் கடந்த சில ஆண்டுகளிலும் இந்த ஆண்டிலும் தமிழ்நாட்டில் நடந்த, நடக்கும் போராட்டங்கள், இயக்கங்கள் பற்றிய செய்திகள் அவை. என்னென்ன செய்திகள் என்று யான் இங்கே குறிப்பிடவேண்டாம்; அஃது என் நோக்கமல்ல. தமிழ்நாட்டில் வாழும் வாசகர்களும் அச்செய்திகளை அறிவார்கள்.

அச்செய்திகளிலிருந்து தமிழ் நாட்டின் போக்கின் பல துறைகளிலும் தடுமாற்றம்

ஏற்பட்டு ஒரே குழப்பம் நிலவியிருப்பது கண்டேன். எறும்புகள் ஒரே வரிசையில் ஒன்றன்பின் ஒன்ருக ஒரொழுங்கில் சென்று கொண்டிருக்கின்றன. அவை செல்லும் தடத்தில் ஏதேனும் ஒரு பெயர்ச்சி அல்லது தடை ஏற்பட்டுவிட்டால் அவை நிலைதடுமாறுகின்றன; நேரானபாதையைக் காணும்வரை கோணல் கோணலாக வட்டமிடுகின்றன. அதேபோலத்தமிழ்நாடு தன் நெறியைத் தவறவிட்டு விட்டுக் கோணல் கோணலாகச் சுற்றிச் சுற்றி வட்டமிடுகிறது. இது தமிழ்நாட்டின் கேடான நிலை.

பத்திரிகை பார்க்குங்காலை தமிழ்நாட்டின் கேடான இந்நிலை என்கண்முன் தோன்றும். 'தமிழ்நாட்டில் இத்தகைய செயல்கள் நடைபெறுகின்றனவே' என்று எண்ண என்மனம் பத்திரிகை பார்க்கவும் விரும்புவதில்லை; யான் பத்திரிகை பார்க்காத நாட்களும் எத்தனையோ கடந்தன!

தமிழ்நாட்டின் இக்கேடான நிலையை ஆராய வேண்டும் என்று யான் எண்ணம் கொண்டேன். திட்டமாகவும் தெளிவாகவும் ஆராய்வதற்காகத் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் சுற்றுப்பிரயாணம் செய்யத் திட்டமிட்டேன். தவிர்க்க

முடியாத சில காரணங்களால் அது கைவிடப் பட்டது; என்றாலும் ஆராயும் எண்ணத்தையான் என் மனத்திலிருந்து அகற்றிவிடவில்லை. தமிழ் நாடு என் தாய்நாடு. இதை ஆராயவென யான் சுற்றுப்பயணம் செய்யவேண்டுமா? எனக்குத் தமிழ்நாட்டின் சில பகுதிகளுக்குப் பலப்பல சமயங்களில் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போதெல்லாம் எனது ஆராய்ச்சிக்குவேண் டிய குறிப்புக்கள் தயாரித்தேன். இல்லமடைந்து அக் குறிப்புக்களைக் கொண்டு ஆராய்ச்சியை மேற்கொண்டேன்.

இவ்வாறு பதினைந்து திங்கள்காலத்தைச் சிந்தனையில் சிலவிட்டுத் தமிழ்நாட்டின் பலவேறு துறை நிலைமைகளையும் ஓரளவுக்குத் திட்டமாகக் கணித்தேன். பின் இந்நூலை எழுதுகிறேன்.

தமிழ்நாட்டின் பல துறைகளிலும் இன்று நிலவும் பல வேறு வேறு நிலைமைகளையும் இம் முன்னுரையில் சுருக்கமாக வரைகின்றேன்.

தமிழ்நாட்டில் 'விபரீதமான மொழி வளர்ச்சிக் கொள்கை' கையாளப்பட்டு வரு கின்றது.

தமிழ் நாட்டில் நிலவும் எண்ணங்களில் தெளிவில்லை; திட்டமில்லை; துணிவுமில்லை. அவை

நிலைபெறமாட்டாமல் நடுக்கமுறுகின்றன. தமிழ் நாடு கொண்டுள்ள கருத்துக்கள் பழைமையானவை. கருத்துகட்கும் எண்ணங்கட்கும் ஒற்றுமை இல்லை; இரண்டும் முரணாக நிற்கின்றன. கருத்துக்கள் காலத்தின் வேலையால் தூசியும் தூருவும் பிடித்து மடித்துப் போன நிலையில் அதிர்ச்சி ஏற்பட்டால்நொறுங்கிஉருத்தெரியாமல் அழிய இருக்கின்றன.

எண்ணங்களில் திட்டமும் தெளிவுமில்லாமையால் பல அரசியல் கட்சிகள் வெடித்துள்ளன.

எண்ணங்கள் நடுங்கிய நிலையில் இருத்தலின் எண்ணங்களைக்கொண்டு உருவாகும் அரசியல் கட்சிகளின் கொள்கைகள் பிடிப்பற்று ஆட்டம் கொடுக்கின்றன.

தமிழ்நாடு புராதனக் கருத்துக்களைக் கொண்டிருத்தலின் புராதன இயக்கம் புத்துயிர் பெற்றெழுந்திருக்கின்றது.

பல அரசியல் கட்சிகள், புராதன இயக்கம் என்ற வகையில் தமிழ் நாட்டுச் சமுதாயம் பல துண்டங்களாகப் பிளந்து கிடக்கின்றது. தமிழ் நாடு விதைக்கப் பயன்படாத மடித்துப்போன

பழங்கருத்துக்களைக்கொண்டிருத்தலின் காலத்துச் செயல்செய்ய மாட்டாத நிலைமையிலிருக்கின்றது. செய்யும் செயல்கள் விளையாட்டாக இருக்கின்றன; அத்தனையும் கொள்கையற்றசெயல்கள்.

கொள்கையற்ற செயல்கள் செய்யப்படுதலின் பலன் விளைகின்றதில்லை; நாட்டின் முன்னேற்றம் சரிந்த நிலையில் கிடக்கின்றது.

பழைமையான கருத்துக்கள் கொள்ளப் பட்டுள்ளதாதலால், நிலவும் எண்ணங்களில் திட்டமில்லாமையால், அரசியல் கொள்கைகள் ஆட்டம் கொடுத்தலால் கலைகள் புதுமை நாட்டமின்றி, பழைமையும் பேச மாட்டாமல், 'காதல் காதல்' என்று கதறுகின்றன.

நாட்டில் ஒரு நிலைமை நிலைபெறுமையால் கல்வி என்ன போதிக்கவேண்டும் என்றில்லாமல் காலத்திற்குப் பொருந்தாத, பயனில்லாத பழைய வாய்பாடுகளை ஓதுகின்றது.

ஒரு நோக்கமும், கொள்கையும், திட்டமும், கட்டுப்பாடும் நாட்டில் இல்லாமையால் பொருளாதாரக் கொள்கைகள் தேடுவாரற்று ஒரு சிலரிடம் சிதறுண்டு கிடக்கின்றன. அவற்றைப்

பிடித்துக் கொண்டவர்கள் அப்பாவிகளை ஓட ஓடத்துரத்துகின்றனர். மொத்தத்தில் தமிழ்நாடு காலத்தினை யனுசரணையாக்கிக் கொள்ளும் முறையறியாத நிலையில் தன் பாதையில் தடுமாறி வீழ்ந்துகிடக்கின்றது.

இருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில், அதாவது இன்று தமிழ்நாடு தன் போக்கில் அடைந்திருக்கும் தடுமாற்ற நிலையில் என்றுமே இதற்குமுன் இருந்திருக்கமுடியாது என்று தயக்கமின்றிக் கூறலாம், பொதுவாக, மனிதஇனத்திற்கு எத்தனையோ இடையூறுகள் வந்துநேர்ந்திருக்கின்றன; ஆயினும் மனித இனம் அவற்றை விடுவித்து முன்னேறி வந்திருக்கின்றது. இது சரித்திர ஏடுகளின் ஒவ்வொரு பக்கமும் நிறைந்து காணக்கிடக்கும் உண்மை. தமிழர்களின்போக்கில் ஒரு தடுமாற்றம்—ஓர் சிக்கல் ஓர்-இடையூறு வந்து நேர்ந்திருக்கின்றது இன்றுமனிதன்போக்கில்முளைக்கும் சிக்கல்கள்எப்போதும் நீங்காமல்போக்குடன் இருந்து நிலை பெறுகின்றதில்லை. மனிதன் போக்கில் முளைக்கும் சிக்கல்கள் மனிதனுல் விடுவிக்க முடியாதவையுமல்ல. இன்றுவரை மனிதன் போக்கு ஒருபோதும் மனிதனுல் விடுவிக்க முடியாத ஒரு சிக்கலில் வந்து அகப்பட்டுக் கொண்ட

தில்லை. இந்த உண்மையை நிரூபித்துக் காட்ட இன்று மனிதன் போக்கில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நாகரிகம் இவை கம்பீரமான காட்சி கொடுத்து நிமிர்ந்து நிற்கின்றன.

இச் சரித்திர உண்மை எனக்குத் தெம்பூட்டுகின்றது: என்னுள்ளத்தில் நம்பிக்கையைத் தோற்றுவிக்கின்றது. "மனிதஇனம் எப்போதும் விடுவித்துக்கொள்ளக் கூடிய வேலையில் மட்டுமே வந்து தங்குகின்றது" ("Mankind always sets itself only such tasks as it Can solve"–Karal Marx) என்ற அறிஞர் காரல் மார்க்ஸின் கருத்து எனக்குத் துணை நிற்கின்றது. தமிழ் மக்களின் போக்கும் தமிழர்கள் விடுவித்துக்கொள்ளக்கூடிய ஒரு சிக்கலில்தான் அகப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

இதே நம்பிக்கையுடன் தான் தமிழர்களின் போக்கில் இன்று ஏற்பட்டுள்ள சிக்கலை ஆராய முயன்றேன். மனிதனால் விடுவிக்கமுடியாத சிக்கலில் மனிதன் அகப்பட்டுக் கொண்டதாகக் கருதுவானானால் அவன் முயற்சியற்றுப்போகிறான். எனவே வாழ்க்கைக்கு முடிவான ஆதாரம் தன்னம்பிக்கை என்று யான் சொல்லவேண்டாம்.

வாழ்வுக்கு முடிவான ஆதாரமாகிய தன்னம்பிக்கை கொண்டு ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழன் போக்கில் இன்று முளைத்துள்ள சிக்கலையும், அதன் காரணத்தையும் அறியவேண்டும் என்பதுவே இந்நூலை எழுதுவதில் எனது நோக்கம்; விருப்பம்.

பொருள் மலர்
இல்லம்,
கோம்பை, 28-6-55.

**வீ. ப. சதாசிவம்.**

# காலமும் தமிழர்களும்

இன்று தமிழ்நாட்டில் பல துறைகளிலும் நிலவும் அலங்கோலமான நிலைமைகளைத் தெளிவாக விளக்கி இந்நூலை எழுதப் பேறுவை எடுக்கிறேன்; அன்றைய தமிழ்நாட்டின் மேம்பட்ட நிலைமை என்கண்முன் தோன்றுகின்றது. தமிழ்நாட்டின் அன்றைய மேநிலையை எழுதாமல், எடுத்துரைக்காமல் என்னால் இருக்க இயலவில்லை இங்கே. என்னுடைய இந்நிலையை யான் உள்ளபடியே கூறுகையில், வாசகர்கள் யான் பழம் பெருமை பேசவிரும்புவதாக எண்ணவேண்டாம். தமிழ் நாட்டின், தமிழர்களின் அன்றைய மேநிலையை இன்று பேசிப்பெருமை கொள்ள யான் விரும்பவில்லை; விரும்பமாட்டேன்; அதிலே பெருமை இருப்பதாக யான் கருதவுமில்லை: ஆனால், நம் தமிழர்கள் அன்றைய நம் பெருமை பேசி இன்று பெருமை கொள்கிறார்.

தமிழ் நாட்டின் இவ்விழிநிலையை எழுதத் தொடங்குங்காலை எனக்குவருத்தம் பிறக்கின்றது. தமிழ்நாடு அன்றைய நாளில் உயர்ந்து விளங்கியது. அன்றைக்கும் என்றைக்கும் தமிழ்நாடு படுகேடான நிலையில் கிடந்திருக்குமானால் தமிழ் நாட்டின் இன்றைய படு கேடான நிலையை வரைகின்றபோது எனக்கு வருத்தம் பிறக்காது.

## தமிழகம் வருந்தும்

தமிழ் நாட்டின் பண்டைய மேநிலையை யான் இன்று பேசிப்புகழ்வதைத் தமிழகம் விரும்பாது; அதற்கு மாறாக வருத்தம் கொள்ளும். மிகத்தாழ்ந்த இழிகேடான நிலையை ஒருவன் அடைந்துகிடக்கும் நேரத்தில் அவனுடைய பண்டைய உயர்நிலையைக் கூறினால் அவன் அதைக் கேட்க விரும்புகிறானில்லை; வெறுக்கிறான். அவனுக்கு அது வருத்தத்தைக்கிளறிவிடுகின்றது. அவனை மறைமுகமாக நையாண்டி செய்ததாகவும் தோன்றுகின்றது அவனுக்கு.

அதேபோலத் தமிழகமும் வருந்தக்கூடும். தமிழகத்திற்கு வருத்தத்தைக் கொடுக்க யான் பண்டைத் தமிழ் நாட்டின் மேநிலையை இங்கே எழுதவில்லை; இன்றைய நிலையை அன்றைய நிலை

யுடன் ஒப்பிட்டுப் பார்த்தறியவே எழுதுகிறேன். அதையும் முடிந்தளவுக்குச் சுருக்கமாகவே எழுதுகிறேன்.

## தமிழகத்தின் அன்றைய நிலை

தமிழகம் அன்று தனிநாடாக விளங்கியது; தனியாட்சி செய்தது. தன்வளம் பெருக்கியது; வாணிபம் வளர்த்தது. உலக நாடுகள் பலவற்றுடன் தமிழ்நாடு உறவு கொண்டிருந்தது. பிற நாடுகள் பலவற்றிலும் தமிழ்நாடு உயர்ந்து விளங்கியது. தமிழ் நாட்டின் உயர்வை உலகறிந்திருந்தது. தமிழ்நாட்டு நாகரிகம் உலகிடையே தனித்து மிளிர்ந்தது. தமிழ்நாட்டு வேந்தர்களும் புலவர்களும் தமிழ் வளர்த்தார்கள்; அதன்மூலம் கல்வி போற்றினர்கள்; கலை வளர்த்தார்கள். தமிழர்களிடையே செல்வர்களும் வறியர்களும் வாழ்ந்தார்கள்.

## தமிழகத்தின் இன்றைய நிலை

தமிழகம் இன்று தனிநாடாக விளங்கவில்லை; தனியாட்சி செய்யவில்லை. தன்வளம் பெருக்கி இருக்கின்றது. வாணிபம் பெருக்கி இருக்கின்றது. உலக நாடுகள் பலவற்றுடன் தொடர்பு கொண்டிருக்கின்றது. பிற நாடுகள் பலவற்றிலும்

தாழ்ந்து நிற்கின்றது. தமிழ்நாட்டின் தாழ்வை உலகறியும். தமிழ்நாட்டு நாகரிகம் அழிந்து காணப்படுகின்றது. தமிழ்மொழி வளர்ந்திருக்கின்றது. தமிழ் நாட்டில் இன்று கலைகள் பெருகி இருக்கின்றன. தமிழர்களிடையே இன்றும் செல்வர்களும் வறியர்களும் வாழ்கிருர்கள். இவ்விரு வர்க்கமும் இன்று வளர்ந்து முதிர்ந்த நிலையில் இருக்கின்றன

## ஏன் இந்நிலை:

அன்று பிற நாடுகள் பலவற்றிலும் உயர்ந்து விளங்கிய தமிழ்நாடு இன்று பிற நாடுகள் பலவற்றிலும் தாழ்ந்து நிற்கக் காரணம் என்ன? உலகிடையே அன்று தனித்து மிளிர்ந்த தமிழ்நாட்டு நாகரிகம் இன்று அழிந்து காணப்படுவதேன்?

'அன்று,' 'இன்று' என்று நாம் பேசும் இரு நாட்களுக்கு இடையே உள்ள காலவெளி பல நூற்றுண்டுகளாம். அவ்விடைக் காலத்தில் தமிழ்நாடு அடிமைப் பட்டுக் கிடந்தது; தமிழ்நாட்டை வேற்றுநாட்டார் ஆண்டார்கள். அவர்கள் தமிழ் நாட்டின் முன்னேற்றம் கருதாமல் தம் நலன் கருதிச் சுரண்டிக் குவித்துக் கொண்டார்கள். இரத்தம் இழந்த நோயாளி போல் இன்று தமிழ் நாடு தாழ்ந்து நிற்கின்றது.

இழந்துவிட்ட இரத்தத்தை மீண்டும் உடம்பில் ஊற்றெடுத்து ஓடச் செய்யப் பல நாட்களும் சத்துள்ள உணவுப் பொருட்களும் நோயாளிக்குத் தேவைப்படுவன போல நாட்டின் செல்வத்தை இழந்துவிட்ட தமிழ்நாட்டுக்கு அதை மீண்டும் அடையப் பல ஆண்டுகளும் மக்களின் முயற்சியுள்ள வேலையும் தேவை.

வேற்றுநாட்டார்கள் தமிழ் நாட்டில் வேற்று முறை, பொருள், பழக்கம், வழக்கம் இவற்றைப் புகுத்திவிட்டார்கள். தமிழ்நாட்டின் பழைமையை மாற்றினார்கள். தமிழ் நாட்டு நாகரிகம் இன்று அழிந்து காணப்படுகின்றது. தமிழ் நாட்டின் கோலம் இன்று எல்லா வகையிலும் வேறுபட்டிருக்கின்றது.

## தமிழகம் உணரும்

இம்மாற்றங்களையெல்லாம் தமிழ் நாடு ஏன் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்? தன் பழைமையையும் நாகரிகத்தையும் காப்பாற்றியிருக்கக் கூடாதோ?

உலகம் உருண்டையானது. அதில் தமிழ்நாடு ஓரிடத்தில் நிலை பெற்றிருக்கின்றது. உருண்டையான உலகம் ஓய்வில்லாமல் சுழல்கின்றது. தமிழ்

நாடும் அதனுடன் சேர்ந்து சுழல்கின்றது. இச்சுழற்சியின் போது காலத்தச்சன் பழைய நிலைமைகளிலிருந்து, பழைய கோலங்களிலிருந்து புதிய நிலைமைகளை, புதிய கோலங்களைச் செதுக்கிப் படைக்கிறான். இவ்வாறே தமிழ் நாட்டையும் செதுக்கிப் புதுப்பித்தான் தமிழகத்தின் பழைய கோலம் அழிந்து போயிற்று; அதன்மீது புதுக் கோலம் உருவாகியுள்ளது. காலத்தச்சன் செயலுக்கு ஆளாகாமல் யார் விலகியிருக்க முடியும்? இதைத்தமிழகம் உணரும்.

## தமிழகம் ஏற்றுக் கொண்டது

தமிழகத்தின் பரந்த இடமெல்லாம் காலத்தச்சன் செய்த வேலையால் பல கிராமங்கள் தோன்றியுள்ளன. பல நகரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. சென்னைமா நகர்! புதிதாகச் சமைக்கப்பட்டிருக்கின்றது. இதன் வளர்ச்சியால் தமிழ்நாடு பெருமை பெற்றிருக்கின்றது இன்று. தமிழ்மக்கள் இன்று பல வாழ்க்கை வசதிகளைப் பெற்றிருக்கின்றனர். நெடுஞ்சாலைகள் எங்கணும் அமைக்கப்பட்டுள்ளன. புகைவண்டிப் பாதைகள் போடப்பட்டுள்ளன. பாலங்கள் ஏராளமான அளவில் எழுப்பப்பட்டிருக்கின்றன. அணைகள் கட்டப்பட்டுள்ளன. வறட்டாறுகள் பல நீர்

பெகி ஓடுகின்றன. பாலை நிலங்கள் பல வளமுள்ள நிலங்களாகியுள்ளன. அனைத்திற்கும் தேவையான மின்சார நிலையங்கள், சக்தியின் பிறப்பிடங்களாக விளங்குகின்றன.

இப்புதுமைகள் அனைத்தையும் தமிழ் நாடு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. பிறநாட்டு முறைகள், பிறநாட்டார் கண்டவைகள் என்று விலக்க வில்லை வாழ்க்கைக்கேற்ப மாறிவரும் முறைபொருள் இவற்றை ஏற்றுக்கொள்ளத் தமிழகம் கற்றுக்கொண்டிருக்கின்றது. ஆனால் மாறிவரும் போக்கை ஏற்றுக்கொள்ளக் கற்றுக்கொண்டிருக்கின்றதா? மாறிவரும் போக்கை ஏற்றுக்கொள்ளத்தமிழகம் கற்றுக்கொண்டிருந்தால் அதன் போக்கில் இன்று காணப்படும் இழிநிலை ஒட்டிக் கொண்டிருக்குமா?

## தமிழகத்தின் கலாச்சார மாற்றம்

முன்கூறப்பட்டவையல்லாமல் தமிழகத்தில் வேறு சில மாற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றன. உடை, பாவனை, பழக்கம், வழக்கம், பேச்சு இவற்றில் ஆங்கிலம் கலந்திருக்கின்றது. இதைத் தமிழகம் பின்பற்றிக் கொண்டிருக்கின்றது.

எனவே தமிழ் நாட்டுக் * கலாச்சாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

## உலகத்தின் சமநிலை

பிறநாட்டாரைப் பின் பற்றும்பழக்கத்தை தமிழ்நாடுமட்டும் கைக்கொள்ளவில்லை. உலகின் பல பகுதியிலுள்ளோரும் ஒருவரையொருவர் பின்பற்றுகின்றனர். இதில் கேவலம் என்று கருதுவதற்கொன்றுமில்லை. பின்பற்றும் பழக்கம் பரந்த உலகத்தின் பல பகுதியிலுள்ளோரும் ஒரேவேகத்தில் முன்னேறிச் செல்ல உதவும் ஒரு ஒப்பற்ற சக்தியாக விளங்குகின்றது. இப்பழக்கத்தைக் கைக் கொள்ளாத போது உலகத்தின் வேகம் ஒரே சீராக இருக்கவியலாது; பல நாடுகள் கி. மு. நான்காம் நூற்றாண்டில் தவழ்ந்துகொண்டிருக்கும் நேரத்தில் ஒரு சில நாடுகள் கி. பி. இருபதாம் நூற்றாண்டில் பறந்துகொண்டிருக்க வேண்டியதாகும்! நரிக்குறவரும் மற்ற மலை சாதியாரும் நம்மைப் பார்த்துப் பின் பற்றுகிறு

---

* கலாச்சாரம் என்றசொல் ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கையமைப்பு, ஊண், உடை, மொழி, மனை, நடை, பாவனை பழக்கம், வழக்கம் இவற்றில் காணப்படும் ஒரு அடிப்படை ஒற்றுமையில் அமைந்திருக்கும் வாழ்க்கை முறையைக் குறிக்கும் சொல்.

ரோ? அவர்கள் எங்கே இருக்கிறார்கள், பாருங்கள்.

## மனிதநாகரிகம் காக்கப்படவேண்டும்

பின்பற்றுதல் எப்போதும் முதலில் காணுவதைக் காட்டிலும் இலகு; அதே நேரத்தில் அதனால் கேடு உண்டாகவும் இடமுண்டு. பின்பற்றுதலில் ஒரு திட்டமான நோக்கம், கொள்கை இவற்றை வகுத்துக்கொள்ளாதபோது மனித நாகரிகம் அழியும். பின்பற்றுவோர் இதை மனத்தில் கொள்ளல்வேண்டும். உலகப்பொது வாழ்க்கைக் கேற்றதையும் வேண்டியதையுமே பின்பற்ற வேண்டும்; ஆடம்பரத்துக்காகவும் பகட்டுக்காகவும் எதையும் பின்பற்றுதல் கூடாது. ஆடம்பரம் பகட்டு இவற்றை விரும்புவது மனிதனின் உயர்ந்த கொள்கைகள் ஆகா.

தமிழ் நாட்டில் பிறந்துவாழ்வோர் ஆடம்பரத்துக்காகவும் பகட்டுக்காகவும் எனப்பிற நாட்டாரின் பழக்கம், வழக்கம், மொழி, உடை இவற்றில் எந்த அம்சத்தையும் பின்பற்றியிருப்பாரானால் விட்டுவிடவேண்டும்.

## தமிழர்களும் சுதந்திரமும்

தமிழகம் அடிமைப்பட்டுக்கிடந்த இடைக் காலத்தில் அதை வேற்று நாட்டார்கள் ஆண்

டார்கள். அக்காலத்தில் அவர்களே — வேற்று நாட்டாரே தமிழ் நாட்டின் போக்கைத் தீர்மானித்தார்கள். இன்று தமிழகம் சுதந்திரம் பெற்று விளங்குகின்றது. நம்மை நாமே ஆட்சி செய்யும் பிறப்புரிமை பெற்றிருக்கிறோம். நமது போக்கைத் தீர்மானிக்கின்றவர் நாமே; வேறு எவருமிலர்.

இச்சுதந்திர நிலையை அடைந்துவிட்ட நாம் நமது போக்கைத் தீர்மானிக்க முயலுகின்றோம். இந்த வேலையில் தான் நாம்—தமிழர்கள் தடுமாற்றம் அடைந்து கிடக்கின்றோம். சுதந்திரம் பெற்ற பின்னரும் வேற்று நாட்டார் கொடுத்த வாழ்க்கை முறை, பொருள், பழக்கம், வழக்கம் இவற்றையெல்லாம் விலக்கிவிடாது பின்பற்றிச் செல்லும் தமிழர்கள் தங்கள் போக்கைத் தீர்மானிப்பதில் மட்டும் பிறநாட்டார் காட்டும் பாதையை ஏற்க மறுக்கிறார்கள். ஏன் ஏற்க மறுக்கவேண்டும்?

மறுப்பதற்குக் காரணங்களாக இருப்பவை தமிழர்களின் மனப்பான்மை, எண்ணம், கருத்து கொள்கை இவைகளே. ஒருவரின் மனப்பான்மை, எண்ணம், கருத்து, கொள்கை இவைகளே அவர் போக்கைத் தீர்மானிப்பவை. எனவே தமிழர்

மனப்பான்மை, எண்ணம், கருத்து, கொள்கை இவை என்னவென்று பார்ப்போம்.

## தமிழகத்தில் பலவகையோர்

தமிழகம் பரந்தது. இங்கு கோடிக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். அவர்களிலே பல வகையோர் இருக்கின்றனர். வேற்று நாட்டாரை இங்கே யான் குறிப்பிடவில்லை; தமிழ்மக்களில் பலவகையோரைப் பற்றிப் பேசுகிறேன். 'நான் இருக்கிறேன்; என்பாடு இருக்கின்றது' என்ற கொள்கையுடைவர் பெருந் தொகையினர். 'நமது அரசியல்' என்ற கொள்கையுடையோர் பலர். 'அகில இந்திய அரசியல்' என்ற கொள்கையுடையோர் சிலர். 'அகில உலக அரசியல்' என்ற கொள்கையுடையோர் சிலர். 'சைவமும் தமிழகமும்' என்ற கொள்கையுடையோர் சிலர்.

இங்கே பலவேறு கொள்கை கொண்டுள்ள தமிழ் மக்களைக் குறிப்பிட்டேன். அவர் கொண்டு உள்ள கொள்கையிலிருந்து ஒரு சிறிதளவு அவரது மனப்பான்மை, எண்ணம், கருத்து இவற்றை நாம் அறிதல்கூடும். மற்றபடி பலவேறு வகையான கொள்கை கொண்ட இவர்களின் மனப்பான்மை, எண்ணம், கருத்து இவை பற்றி

யெல்லாம் கூறப் புகுந்தால் இச்சிறு நூல் பெரு நூலாகக்கூடும். எனவே அவை பற்றிக்கூருது விடுத்தேன்.

## மொழிப்பற்று மிக்கோர் என்ற தனிவகையார்

இவர்களல்லாமல் வேறு ஒரு வகையாரைப் பற்றி எடுத்துரைக்கவேண்டும். யான் எடுத்துரைக்க இருக்கும் இவர்களை ஒரு தனி வகையார் என்று பாகுபாடு செய்வது பொருந்தாது; இவர்கள் காற்றடித்தபக்கம் சாய்கின்ற ஒரு கூட்டத்தார்; ஆயினும் இவர்கள் மனப்பான்மை, எண்ணம், கருத்து, கொள்கை இவற்ருல் வேறுபட்டிருக்கின்ருர். எனவே இவர்களை தனிவகையாகப் பகுத்துக்கொள்வது நம் ஆராய்ச்சிக்கு இலகுவாகும்.

'உலகம் என் நாடு; தமிழகம் என் நகரம்; தமிழ் என் இல்லம். தமிழகம் என் உடல் என்ருல் தமிழ் என் உயிர்' என்ற கொள்கையுடையோர் இவர்கள். தமிழகத்தில் பிறந்து தமிழகத்தில் வாழும் எல்லோருக்கும் இக்கொள்கை பொருந்தும். இதையே தம் தம் கொள்கையாக ஒவ்வொரு தமிழரும் கொள்ளல் வேண்டும். மிகமிகக் குறைந்த சிலரே இக்கொள்கையை ஏற்றுக் கொள்ளாமல் தமிழகத்தில் இருக்கின்றனர்.

இவர்களைப் பற்றி–தமிழ் மொழிப் பற்று மிக்கோர் பற்றி யான் இங்கே விரிவாக எழுத வேண்டும். இவர்களை அரசியல் வாதிகள் என்று சொல்லமுடியாது. இவர்களில் மிகமிகக் குறைவான சிலர் ஏதேனும் ஒரு வகை அரசியல் வாதியாக இருக்கலாம் இவர்கள் மதவாதிகள் என்பது உண்மை. இவர்களில் பலரும் பல சமயத்தைச் சார்ந்தவர்கள். இவர்களில் முக்கியமான சிலர் மொழிவல்லார், பண்டிதர், புலவர்களாவர். இவர்கள் பலர் தமிழ்மொழியை நன்ருகக் கற்றவர்கள்; தமிழ்மொழியிலுள்ள பண்டைய இலக்கியங்கள் பலவற்றையும் கற்றவர்கள். இவர்களில் வெகு சிலர் இவற்றைப் படித்திராவிட்டாலும் வாசிக்கக் கேட்டிருப்பர். இவர்கள் தமிழ் நாட்டின் பழம் பெருமை அறிந்தவர்கள். இன்றும் பண்டைத்தமிழ்நாட்டின் பழம்பெருமை பேசுகின்றவர்கள். தமிழ்நாட்டின் புகழ் பாடுகின்றவர்கள். தமிழ்நாட்டின் பெருமை ஓதுகின்றவர்கள். தமிழ் நாட்டுப் பற்று உடையவர்கள். தமிழன் என்ற இனப்பற்றுடையவர்கள். எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் மொழிப் பற்றுமிக்கவர்கள் இவர்கள். இவர்களுக்குத் தலைவராகவும் வழிகாட்டிகளாகவும் விளங்கு

கின்றவர்கள் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்று விளங்கும் தமிழ் மொழிவல்லார்கள்.

## 'தமிழ'னை உருவாக்குபவர் தமிழ்மொழிவல்லாரே

இக்கூட்டத்தாரின் தலைவர்களாகிய தமிழ் மொழிவல்லாரே, தமிழ்மக்களிடம் ஒரு வகையான தனித்த குணங்களை உருவாக்குபவர். 'தமிழன்' என்று சொல்லப்படுகின்றவனுக்கு உரிய குணங்களை உருவாக்கியவர் இம்மொழி வல்லாரே. ஆங்கில மொழிக்காரன் 'ஆங்கிலேயன் என்றவொரு தனிக்குணமுடையவனாக இருப்பது போலவும், ஜெர்மன் மொழிக்காரன் 'ஜெர் மானியன்' என்றவொரு தனிக்குணமுடைய வனாக இருப்பதுபோலவும், தமிழ்மொழிக்காரன் தமிழன்' என்றவொரு தனிக்குணமுடையவனாக இருக்கிறான். தனிக்குணமுடைய 'தமிழன்' என்பவனை உருவாக்கியவரும், வளர்த்து வருகின்றவரும் தமிழ் மொழிவல்லாரே.

## மொழிவல்லாரும் மக்களும்

ஒரு நாட்டு மொழிவல்லார் அந்நாட்டு மக்களின் குணங்களை உருவாக்குபவர் என்ற நிலையை எப்படி அடையக்கூடும்?

குணங்கள், பொதுவாக வளர்க்கப்படும் முறைக்கேற்ப வளருகின்றன. அன்பாக வளர்க்கப்பட்டவன் அமைதியான குணமுடையவனுக இருக்கிருன். கொடுமையாக வளர்க்கப்பட்டவன் பிடிவாதக் குணமுள்ளவனுகவும் முரடனுகவும் இருக்கிருன். குழந்தைகளே வளர்க்கும் தாய் தந்தையர் எப்படிக் குழந்தைகளிடம் அன்பு, அமைதி, பிடிவாதம், முரட்டுத்தனம் என்பன போன்ற குணங்களே உருவாக்கல் முடிகின்றதோ, அதேபோல ஒரு மொழிவல்லார் அம்மொழி பேசும் மக்களிடம் பழைமை விரும்புதல், புதுமை நாடுதல், பிறநாட்டாரை மதித்தல், பிறநாட்டவருடன் உறவு கொள்வதை விரும்புதல் என்பன போன்ற குணங்களே உருவாக்கல் கூடும்.

இவர்–மொழிவல்லார் மக்களிடம் குணங்களே உருவாக்கும் அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட மனப்பான்மை, எண்ணம், கருத்து, கொள்கை இவற்றை விதைத்துவிடவும் உருவாக்கிவிடவும் கூடும்; இவ்வேலேயும் இவர்க்கு இலகுவாகவே இருக்கின்றது.

எடுத்துக்காட்டாக ஒன்று பார்ப்போம். திருக்குறள் என்ற புராதனத்தமிழ் நூல் பற்றி எந்நேரத்தும் எவ்விடத்தும்,

"குறள் நூல் எந்நாட்டவர்க்கும் எம்மதத்தவர்க்கும் எக்காலத்துக்கும் பொருந்துவது. இதில் இல்லாத கருத்துக்களே இல்லை. இஃது உலகிலுள்ள நூல்கள் எல்லாவற்றிலும் சிறந்தது.", என்று ஓயாது புகழ்ந்து பேசி, அந்நூல் செய்யுட்களையும் ஒப்பித்துவரும் தமிழ்மொழிவல்லார் தமிழ் மக்களிடம் 'தற்பெருமை'க் குணத்தை உருவாக்குகின்றார்; அதே நேரத்தில் திருக்குறள் கருத்துக்களைத் தமிழ் மக்களிடம் விதைத்து விடுகின்றார்.

மொழிவல்லார் இவ்விருவேலை (மக்களிடம் குணங்களை உருவாக்குதல், அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட மனப்பான்மை, எண்ணம், கருத்து, கொள்கை இவற்றை உருவாக்குதல்)களையும் இலகுவாகச் செய்து முடித்தற்குச் சாதகமாக இவர்க்குப் பல ஏதுக்கள் இருக்கின்றன. இவர்க்கு ஏதுக்களாக இருப்பன இவர்கற்ற பண்டைய இலக்கியங்கள், மொழிக்கலைகள், இவரே எழுதும் நூல்கள் முதலியன. இவற்றைக்கொண்டு இவர் நாடு, மொழி இவற்றைப் புகழ்ந்து பேசுகிறார். ஒரு மொழியுடையோரது கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவை எவையெவை என்பது காட்டி அவற்றை நிலைப்படுத்துகிறார். கலாச்

சாரம், பண்பாடு* இவையிரண்டுமே வாழ்க்கை முறைகள். இவ்வாழ்க்கை முறையைச் சுட்டிக் காட்டி மக்களிடம் நாட்டின் போக்கு பற்றியும் எச்சரிக்கிறார், இம்மொழிவல்லார். இந்த உண்மையை ஒவ்வொரு நாட்டிலும் காணலாம்.

## தமிழ் மொழிவல்லாரும் தமிழர்களும்

நம் தமிழ்மொழிவல்லாரோ இத்துறைத் தொழிலில் கைதேர்ந்து நிற்கிறார். தமிழ் மக்களிடம் தனித்த குணங்களையும், மனப்பான்மையையும், எண்ணங்களையும், கருத்துக்களையும் கொள்கைகளையும் உருவாக்குவதில், அவற்றை வளர்ப்பதில் இவருக்கு நிகர் இவரேதான்; வேறு எவருமிலர்.

தமிழ் நாட்டைப்பற்றித் தமிழ் மொழியைப் பற்றித் தமிழனைப் பற்றி எந்நேரமும் எவ்விடத்தும் பேசிக்கொண்டே இருக்கிறார். எப்படிப்பேசுகிறார்? ஒரே பொருமையாகத்தான் பேசுகிறார்;

---

* பண்பாடு என்ற சொல் ஒரு நாட்டு மக்கள், பெருமை, சிறுமை, கண்ணியம், மானம், ஒழுக்கம் என்பனபோன்ற அம்சங்களில் கொள்ளும் கருத்து, கொள்கை இவற்றிடையே காணும் ஒரு அடிப்படை ஒற்றுமையில் அமையும் வாழ்க்கை முறையைக் குறிக்கும் சொல்.

உள்ள குறையையும் கூறுகின்றாரில்லை. தமிழர் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவை பற்றியும் அப்படியே பேசுகிறார். தமிழர் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவையே உலகில் சிறந்தவை மேலானவை என்று பேசுகிறார். அநேகமாக இவர் இவ்வாறு பேசுவதெல்லாம் பழைமையே, பழைமை பற்றிய பெருமையே. பழம் பெரும் பெருமை பேசுவதிலேதான் இவர்க்கு மகிழ்ச்சியெல்லாம்.

நம் தமிழ்மொழிவல்லார் என்ன பேசி 'தமிழன்' என்பவனிடம் என்னென்ன குணங்களை உருவாக்கி வளர்த்துவருகிறார் என்பதும், தமிழ் மக்களிடம் தனித்த குணங்களை உருவாக்கிய அதே நேரத்தில் என்னென்ன குறிப்பிட்ட மனப்பான்மைகள், எண்ணங்கள், கருத்துக்கள் இவற்றை உருவாக்கி வளர்த்து வருகிறார் என்பதும், தமிழர்களின் இன்றைய மனப்பான்மை, எண்ணங்கள், கருத்துக்கள், இவைசார்ந்த கொள்கைகள் என்னென்னவென்பதும், இவற்றால் ஏற்பட்டுள்ள தமிழர்களின் இன்றைய போக்கு என்னவென்பதும் அடுத்தடுத்த பகுதிகளில் காண்போம்.

# தமிழர்களும் அவர்கள் பேச்சுக்களும்

## நாட்டில் மொழியின் முதலிடம்

ஒரு நாட்டு மொழியின்வளர்ச்சி, அதன் வளர்ச்சிமுறை, அதன் வழக்கின்பெருக்கம் இவை மூன்றும் நாட்டுமக்களிடையே கலாச்சாரத்திற்கும் பண்பாட்டிற்கும் காரணமாக அமைகின்றன; அது மட்டுமல்லாமல் இவையே மக்களிடையே ஊறிப்போகும் மனப்பான்மைக்கும், எண்ணங்கட்கும், கருத்துகட்கும், இவை சார்ந்த கொள்கைகளுக்கும் மூல காரணமாக அமைந்து கிடக்கின்றன. ஒரு மொழி சமய நூல்களின் பெருக்கத்தால் வளர்ச்சியுற்றிருக்குமாகுல் அம்மொழி மக்கள் சமயஉணர்வுகொண்டவராக இருக்கின்றனர். ஒரு மொழி ஆராய்ச்சி நூல்களின் பெருக்கத்தால் வளர்ச்சியுற்றிருக்குமாகுல் அம்மொழி மக்கள் ஆராய்ச்சி மனப்பான்மை கொண்டவராக இருக்கின்றனர் என்பது காண்கிறோம். இவற்றிலிருந்து மக்கள் பண்புகளை உருவாக்குவதில் மொழி முக்கிய இடம் பெறுகின்றதுஎன்பது அறிவோம்.

## மொழியும் ஆராய்ச்சியாளர்களும்

மொழியின் இவ்வம்சங்கள்-வளர்ச்சி முறை, வழக்கின் பெருக்கம் நேரியமுறையில் வளர்த்துச் செல்லப்படல்வேண்டும்; அப்போதே மொழியை வழக்கில் கொள்ளும் மக்களின் மனப்பான்மை, எண்ணம், கருத்து, கொள்கை இவைகள் பக்குவப்பட்டிருக்கக்கூடும்; மொழியின் இவ்வம்சங்கள் தவருன முறையில் வளர்க்கப்படுமாஞல் அவை மக்கள் மனப்பான்மை, எண்ணம், கருத்து, கொள்கை இவற்றைப் பாதிக்கும்.

ஒரு மொழியின் இம் மூன்றம்சங்களையும் நேரிய முறையில் வளர்த்துச் செல்லுதல் எக்காலத்தும் புலவர்களுக்கும் பண்டிதர்களுக்கும் இயலாத காரியம். ஏனெனில் புலவர்களும் பண்டிதர்களும் எக்காலத்தும் எந்நாட்டிலும் கூலிக்குப் புகழ்பாடும் சோற்றுப் பண்டாரங்களாகவே இருந்து வந்திருக்கின்றனர்; இன்னும் கூட அப்படியே இருந்து வருகின்றனர். கூலிக்குப் புகழ்பாடும் சோற்றுப் பண்டாரங்கள் எத்துணை வல்லாராயினும் எப்படி மொழியை நேரிய முறையில் வளர்த்துச் செல்லுதல் கூடும்? உண்மையும் உயர்ந்த மனப்பான்மையும் கொண்ட ஆராய்ச்சியாளர்களே மொழியை நேரிய முறையில்

வளர்த்துச் செல்லுதல் கூடும். அவர்களே ஒரு மொழியின் உயர்ந்த பலனை வெளிப்படுத்தவும் கூடும்.

## தமிழ் மொழியும் பண்டைப் புலவர்களும்

நம் தமிழ் மொழியை அன்றிருந்து வளர்த்து வந்தவர்கள் புலவர்கள். அவர்கள் எத்தகை முறையில் தமிழை வளர்த்தார்கள்?

தமிழையும் சமயத்தையும் சேர்த்தே வளர்த்தார்கள். தமிழ் என்று கூறிச் சமயம் வளர்த்தார்கள்; சமயம் என்று கூறித் தமிழ் வளர்த்தார்கள். தமிழும் சமயமும் தமிழர்களிடையே இணையாக வளர்ந்தன. தமிழர்களின் உள்ளத்தில் இந்துமத உணர்ச்சியும் தமிழ் உணர்ச்சியும் பெருகிப் பொங்கி வழிந்தன. தமிழ் கற்றோர் சைவத்தைக் கற்றார்கள். பெரிய புராணமென்ன? தேவாரமென்ன? திருவாசகமென்ன? கைவல்யமென்ன? அத்தனையும் சைவமத நூல்கள். தமிழ் மக்களிடம் தமிழ்உணர்ச்சியுடன் கலந்து சைவமத உணர்ச்சி பொங்கியது. இதுமட்டுமல்ல. தமிழ் கற்றோர் வைணவத்தையும் கற்றார்கள். கம்பராமாயணமென்ன? வில்லிபாரதமென்ன? அத்தனையும் வைணவமத நூல்கள். தமிழ் மக்க

ரிடம் தமிழ் உணர்ச்சியுடன் கலந்து வைணவமத உணர்ச்சி பொங்கியது.

தமிழ் உணர்ச்சியுடன் இந்துமத உணர்ச்சியைத் தமிழர்களுக்கு ஊட்டிய பண்டைப் புலவர்கள் வேறென்றும் செய்தார்கள். தம் வயிற்றுச் சோற்றுக்குப் புகழ் பாடினர்கள். எப்படி? பெருநிலப்பிரபுக்களையும், பெரும் பணக்காரர்களையும், மன்னர்களையும் புகழ்ந்து பாடி நிலைப்படுத்தினர்கள். போதாக்குறைக்குத் தமிழனைப் புகழ்ந்து, தமிழ் மொழியைப் புகழ்ந்து, தமிழ் நாட்டைப் புகழ்ந்து பாடி மடிந்தார்கள்.

## தமிழ்மொழியும் இன்றைய மொழி வல்லாரும்

அன்றிருந்த புலவர்கள் தான் இப்படிச் செய்தார்கள் என்றால், இன்றிருக்கும் புலவர்களும், பண்டிதர்களும், ஏனையமொழிவல்லாரும்? அவர் காட்டிய வழியில் அடிபிறழாது நடக்கின்றார்.

தமிழ் மொழியையும் சமயத்தையும் சேர்த்தே வளர்க்கிறார். திருவருட்பா பாடுகிறார். திருமால் வேட்கை பாடுகிறார். 'சொல்லடி சிவசக்தி' என்று பாடுகிறார். பராசக்தி திருவிளையாடல் பாடுகிறார். மாரிமுத்து, மாரிமுத்து!' என்று நெஞ்சிலடித்துக்

கொண்டு கதறுகிறார். கண்ணன் பாமாலை பாடுகிறார். இவையெல்லாம் என்ன, சமயம் பேச்சுக்கள் இல்லையோ?

சமயப் பேச்சுக்கள் பேசும் இவர் வேறொன்றும் செய்கிறார்கள். புகழ், பெருமை பாடுகிறார் எந்நேரமும்! எப்படி? 'பாரில் உயர்ந்த தமிழ்நாடு' என்று பாடுகிறார். 'வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று புகழ்கிறார். 'உலகிலே தமிழ்மொழி போல் இனியதொன்றில்லை' என்று பெருமை கற்பிக்கிறார். 'தொன்மையதாம் தமிழ் மொழி போல் வேறெதுவுமில்லை' என்று பூரிக்கிறார். 'உலகிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப் போல் புலவர் வேறெவருமில்லை' என்று புகழ் சொல்லிக் கொள்கிறார். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டோம்' என்கிறார். 'குறளில் சிறந்த நூலில்லை வள்ளுவரில் சிறந்த ஆசிரியரில்லை' என்கிறார்.

கவிதைகளைமட்டும் இவ்வகையில் இயற்றுகின்றார் என்றில்லை; உரை நடை நூல்களையும் இப்படியே இயற்றுகின்றார். எந்நேரம் எதுபற்றிப் பேசினாலும் பழைமைக்கு மக்களை இழுத்துச் செல்கிறார். ஒரு பத்துக்குறள், இருபுறநானூற்றுச் செய்யுள், ஒரு அகநானூற்றுச் செய்யுள், கலித்

தொகையில் ஒன்று, நாலடியில் ஐந்து என எடுத்தாள்கிறார். பழைமையில் நம்மைச் சற்றுநேரம் அழுத்துகிறார். நம்மைப் பழைமைக்கு இழுக்காமல் சொல்லவந்ததைச் சொல்ல இவர்களால் முடிகிறதேயில்லை.

அதுமட்டுமா? பெருமை பாடாமல் சொல்ல வந்ததைச் சொல்லவும் இவர்களால் முடிகிறதில்லை சிலப்பதிகாரத்திலிருந்து இரு கவிதை, மனோன்மணீயிலிருந்து ஒரு பகுதி என எடுத்துத் தமிழ்மொழியின். தமிழனின், தமிழ் நாட்டின் பெருமை பாடுகிறார் மூன்றும் வகுப்பில் ஆரம்பமாகும் தமிழ்ப் பாடங்களிலிருந்து கல்லூரி வகுப்புத் தமிழ்ப் பாடங்கள் வரையிலும் மாணவர்களும் இப்பெருமையே ஓதக் கேட்கின்றார்கள். பாடங்கள் ஓதுவது போதாவென்று அவை கற்பிக்கும் ஆசிரியர்களும் ஓதுகின்றார்.பெருமை. சமய உணர்ச்சியிலும் மாணவர் பக்குவப் படுத்தப் படுகின்றனர்.

அத்தோடு காதல் உணர்ச்சியிலும் மாணவர்கள் பக்குவப் படுத்தப் படுகின்றனர். வாழ்க்கைக்குத் தேவையான மற்ற பொது அம்சங்கள் பற்றிய நூல்கள் ஏதோ ஒன்றோ இரண்டோ எழுதப்படுகின்றன. தமிழ் மொழியில் காதல் பேசும் கதை நூல்களுக்கு இன்று குறைவில்லை.

'ஒருவன் ஒருத்தியைக் காதலித்துக் கூட்டிக் கொண்டு ஓடினன்' என்ற கதை தான் எத்தனை? இன்னும் சில நாட்களில் இக்கதை நூல்களைக் கணக்கிட எண்ணே இல்லாமல் போகக்கூடுமோ என்னவோ! தமிழ் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற சில மாத, வாரப் பத்திரிகைகள் இருக்கின்றன. அவற்றை நோக்கினலோ மாமியார் மருமகள் சண்டையும் மனைவி கணவனிடம் இரட்டைவடம் மாங்கொத்துச் சங்கிலி வாங்க நடத்தும் போராட்டமும் தாம் நாவல் கதைகளுக்கும் சிறு கதைகளுக்கும் முடிவான எல்லையில் நிற்கும் பொருள்களோவென்று எண்ணத் தோன்றுகின்றது. இவையெல்லாம் வாலிபரின் தவருன சிந்தனைக்குத் தூண்டுகோலாக அமைகின்றன. தமிழ் மொழியிலுள்ள ஆராய்ச்சி நூல்களைச் சமய நூல்களுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கொன்று என்ற விகிதம் கிடைப்பதும் அரிது.

## தமிழன் குணம்

இவ்வாறு தமிழ்மொழி வளர்ச்சியடைந்து உள்ளது; இன்றும் வளர்கின்றது. இம்மொழி வளர்ச்சி யதனுடன் சேர்த்தே சமய உணர்ச்சியையும், தற்பெருமையையும், பழைமையிலொரு பற்றுதலையும் வளர்த்துள்ளது; இன்றும் வளர்க்

கின்றது. தமிழர்கள் சமய உணர்ச்சி நிறைந்தவர்களாகவும், தற்பெருமை மனப்பான்மை கொண்டவர்களாகவும், பழைமைப் பித்தர்களாகவும் இன்று இருக்கின்றனர். தமிழர்களின் இக் குணங்களேவெறுக்கப்படுவதற்குரியவை. அறிஞர் அயின்ஸ்டீன் (Einstein) "இந்தியர் பெருமைக் காரர்" என்று கூறித் தம் வெறுப்பைக் காட்டினர். அறிஞர் காரல்மார்க்ஸ் (Karlmarx) "இந்தியர் பழைமைப் பித்தர்கள்," என்று கூறித் தம் வெறுப்பைக் காட்டினர். இவர் கூற்றுக்கள் இந்திய நாட்டிலுள்ள மற்றவருக்குப் பொருந்துமோ என்னவோ, நம் தமிழருக்கு முற்றிலும் பொருத்தமாக இருக்கின்றன.

## கண்மூடித்தனமிது

ஒரு நாட்டு மக்கள் உலகில் அவர்நிலே, அவர் நாட்டின் நிலே, அவர் மொழியின் நிலே இவற்றை அறிந்திருத்தல் வேண்டும். தம்நாடு, தம்மொழி, தம்மினம் பற்றிக் கண்ணியமாகவே கருதுதல் வேண்டும். ஆனல், அவர் 'தற்பெருமை' பேசிக் கொள்ளவேண்டுமென்பதில்லே. மக்கள் தம்நாடு, மொழி, இனம் பற்றிக்கொள்ளும் கண்ணியமான கருத்து அல்லது மதிப்பு கண்மூடித்தனமானதாக இருக்கலாகாது. மக்கள் தம் நாடும், மொழியும்,

இனமுமே உலகில் சிறந்தவை, மேலானவை, உயர்ந்தவை என்று கொள்ளுதல் அர்த்தமற்ற தாகும்; கண்மூடித்தனமாகும்; இது தான் தற் பெருமையாகும்.

எந்நாட்டு மக்களும் இக்குறுகிய மனப்பான் மையால் ஆட்சி செய்யப்படுதல் அவர்க்கே நல்ல தன்று. குறுகிய மனப்பான்மை கொண்ட அவர் உலகில் எவருடனும் நல்லுறவு கொள்ள முன்வர மாட்டார்; பிறரை மதிக்கவும் தயங்குவார். கண்மூடித்தனமான தற்பெருமை கொண்டவர், பிறநாடு, பிறநாட்டு மொழி, பிறநாட்டு மக்கள், அவர் முன்னேற்றம், அவர் நாகரிகம் இவை பற்றிய உண்மையான பெருமையையும் உணர முடியாதவராகி விடுகிறார்.

## தமிழர் தற்பெருமைக்காரராகியது என்று?

இத்தகைய கண்மூடித்தனமான தற்பெரு மையை அநேகமாகப் பண்டைப் புலவர்கள் வளர்த்தார்களில்லை இந்நாள் புலவரும் பண்டித ரும் ஏனைய மொழிவல்லாருமே வளர்த்தார்கள் என்று சொல்லாம். முன்னம் யான் எடுத்துக் காட்டிய வண்ணம் நாடு, மொழி, இனம் பற்றிய கண்மூடித்தனமான தற்பெருமையை வளர்த் தவர்கள், வளர்க்கின்றவர்கள் அண்மை நாட்

களில் வாழ்ந்தவரும் இன்று வாழும் புலவரும் மொழிவல்லாருமே. தமிழர்கள் என்றும் பெருமைக்காரர்களே என்றாலும் கண்மூடித்தனமான தற்பெருமைக்காரர்களாக வளர்ந்துவருவது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து என்று கூறலாம். இன்றைய தமிழர்களே கண்மூடித்தனமான தற்பெருமை கொண்டு விளங்குகிறார்.

தமிழர் கொண்டுள்ள தற்பெருமை மனப்பான்மை தமிழ்மொழி வளர்ச்சியுறும் முறையைப் பாதிக்கின்றது. தமிழரை விபரீதமான மொழிவளர்ச்சிக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடிக்கச் செய்திருக்கின்றது இன்று. அத்தோடு தமிழ் மொழியில் கருத்து வளர்ச்சியுறும் முறையைப் பாதிக்கின்றது. தற்பெருமை மனப்பான்மை கொண்ட தமிழர்கள் தமிழ் மொழியில் கருத்து வளர்க்க இன்று ஒரு 'கோணல் முறை'யைக் கையாண்டு வருகின்றனர். இதுபற்றி யான் எனது 'தமிழர்களின் தரித்திரம்' என்ற தனித்த கட்டுரையில் ஆராய்ச்சி செய்துள்ளேன். இங்கும் அது பற்றிப் பேசுதல் யான் எடுத்துள்ள பொருளுக்கு வேண்டியதாகும்; ஆனால் நூல் பெருக்கத்திற்கு அஞ்சி விடுக்கிறேன். இங்கே

தமிழர் கொண்டுள்ள தற்பெருமை மனப்பான்மையால் விளைந்த 'மொழி வளர்ச்சி விபரீதக் கொள்கை' பற்றி மட்டும் பேசுவோம்.

## உலகத்துப் பல நாடுகளும் உறவுகொள்ளுதல்

இவ்வுலகத்து நாடுகள் பலவும் ஒன்று மற்றதுடன் உறவு கொள்ளுதல் உண்டு. இஃது அருகாமையிலுள்ள நாடுகளைப் பொறுத்த மட்டில் தவிர்க்கமுடியாதது. அருகாமையிலுள்ள நாடுகள் இரண்டு, எத்தகைய விரோதம் கொண்டிருப்பினும் என்றேனும் ஓர் நாள் உறவு கொண்டே தீரும். உறவு கொள்ளுங்காலத்தில் இரு நாடுகளின் கலாச்சாரம், பண்பாடு, கலைகள் மொழி இவை ஒன்றிலிருந்து மற்றதில் பரவி, நிலைத்து விடுதல் இயற்கை. இவ்வகையில், வட நாட்டுடன் தென்னாடு பன்னெடுங்காலமாக உறவு கொண்டதால் அதன் கலாச்சாரம், பண்பாடு, கலைகள், மொழி இவை தென்னாட்டில் பரவின. இன்றைக்கும் தமிழ்க் கலைகளுடன் வடகலைகள் இரண்டறக் கலந்து கிடத்தலைக் காண்கிறோம். தமிழ் மொழியில் பல வட மொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ் மொழியும் அவற்றைத் தனதாக்கிக் கொண்டுள்ளது.

பின்னுளில் ஆங்கிலேயர் இந்தியாவை அடிமைப் படுத்தி ஆட்சி செய்தார். அவர் ஆட்சிக் காலம் ஏறக்குறைய இருநூற்ருண்டுக் காலம் நீடித்தது. அந்நாட்களில் தமிழ்நாடு பல துறைகளில் மாற்றங்களை ஏற்றுக்கொண்டது ஆங்கிலக் கலைகள் தமிழ்நாட்டில் பரவின. விஞ்ஞானம் முதன் முதலாகத் தமிழகத்தில் வேரூன்றியது. விஞ்ஞான ஆராய்ச்சி முறையைத் தமிழகம் புதிதாக அறிந்தது. தமிழ்க்கலைகள் பலன் தரத்தக்கனவாயின. தமிழர்களின் கருத்தில் வளர்ச்சி ஏற்பட்டது. உலகத்தின் போக்கு வேகத்திற்குத் தன்னை ஈடுகொடுப்பதற்கேற்ற பக்குவநிலையடைந்தது தமிழகம். தமிழ்மொழியும் ஆங்கில மொழிச் சொற்களை ஏற்றுத்தனதாக்கித் தன்வளம் பெருக்கிக் கொண்டது. இவையனைத்தும் காலப் போக்கில் இடம் பெற்ற மாற்றங்கள்.

## தமிழ் மொழியின் பெருமை

காலப்போக்கில் இடம் பெறும் மாற்றங்களுக்கு ஈடு கொடுத்து வரைக்கூடிய தன்மை நிறைந்து விளங்குகின்றது தமிழ்மொழி. எம் மொழியிலுமுள்ள சொற்களின் ஓசையையும் ஒலித்துக்காட்டத் தமிழ்மொழியில் எழுத்துக்கள் உள்ளன. இவ்வெழுத்துக்கள் உள்ளதால் தமிழ்மொழி தனித்தியங்கும் மொழியாக உள்ளது.

தனித்து இயங்கும் மொழியென்றால் பிற மொழிச் சொற்கலப்பின்றி இயங்கும் மொழி என்று பொருள் கொள்ளலாகாது; அத்தகைய பொருளில் யான் இதைப் பயன் கொள்ளவில்லை. அத்தகைய மொழி-பிறமொழிச் சொற்கலப்பின்றி இயங்கும் மொழி உலகம் சுருங்கிய இந்நாளில் இருத்தல் இயலாது. இன்று உலகம் முழுதும் விஞ்ஞான வளர்ச்சியால் நெருங்கிய உறவு கொண்டிருத்தலால் பல மொழிச் சொற்களும் ஒரு மொழியில் ஏறிவிடுகின்றன. எனவே பிற மொழிச்சொற் கலப்பின்றி இயங்கும் மொழி இருத்தல் இயலா.

மேலே யான் குறிப்பிட்ட எழுத்துக்களைக் கொண்டு தமிழ் மொழி பிற மொழிச் சொற்களை அப்படியே எடுத்தாழ்கின்றது. * அவற்றைத் தன தாக்கிக் கொள்ளும் தன்மையை இவ்வெழுத்துக் களைப் பெற்றிருப்பதால் தமிழ் மொழி உடையதாக இருக்கின்றது. இவ்வகையில் தமிழ் மொழி

* டாக்டர் (Doctor) சூப்பரின்டென்டென்ட் (Superintendent) காம்யூனிஸம் (Communism) சோஷலிஸம் (Socialism) க்ரிட்டிஸிஸம், (Criticism) ஜமாளிப்பு சால் ஜாப்பு. ஜீவன், இப்பிறமொழிச்சொற்களைத் தமிழ் எடுத்தாழ்கின்றது. இதற்குத் துணைபுரிவன 'ஷ', 'ஸி', 'ஸ', 'ஜ', 'ஜீ' என்பனபோன்ற எழுத்துக்கள்.

இயற்கையாக வளர்கின்றது. இயற்கையாக வளர்ச்சியடையும் தமிழ் மொழியைப் போற்று கிறேன். காலத்தின் போக்கிற்கும் வேகத்திற்கும் ஈடு கொடுக்கும் தன்மை நிறைந்து தமிழ்மொழி விளங்கவேண்டும் என்றே விரும்புகிறேன்.

## பழம்புலவர்களும் மொழிவளர்ச்சிக் கொள்கையும்

காலத்தால் ஏற்பட்ட இம்மாற்றங்களைப் பண்டைப் புலவர்கள் வெறுத்தார்களில்லை மொழி இயற்கையாக வளர்ந்து செல்லும் அதன் போக்கில் குறுக்கிட்டார்களில்லை. வடகலைகளைத் தென்கலைகளுடன் போற்றி வளர்த்தார்கள் தமிழ் வடமொழிச் சொற்களை ஏற்றுத்தனதாக் கிக் கொண்டது குறித்துத் தமிழ்மொழிக்குப் பெருமை குறைந்ததாகக் கருதினார்களில்லை. வட மொழிச் சொற்களும் பிறமொழிச் சொற்களும் கலக்கவர எழுதப்படும் 'மணிப்பிறவாள நடை' என்று பெயர்கொண்ட நடையில் எழுதினார்கள் பாடினார்கள்.

## மொழி வளர்ச்சி விபரீதக்கொள்கை

இன்று கண்மூடித் தற்பெருமை கொள்ளும் மொழிவல்லார்கள் தமிழ் மொழி போல் சிறந்தது

என்று சொல்லப்படும் தமிழ்மொழி பிறமொழிச் சொற்களை எடுத்தாள்வது அதன் பெருமைக்குக் குறைவு என்று கருதுகிறார். எனவே தமிழ்மொழி யுடன் பிறமொழி எதுவும் உறவாடுதலை, உறவாடிக்கலத்தலை இவர் விரும்புகின்றாரில்லை; இயற்கையாக வளர்ந்து செல்லும் அதன் போக்கில் குறுக்கிடுகின்றார்; தாம் எண்ணியபடி அதனை வளர்த்துச் செல்ல முயல்கிறார்.

இயற்கையான மொழிவளர்ச்சியில் குறுக்கிடுவதால், மொழி எதற்காகத் தேவைப்படுகின்றது என்பதை அறிய முடியாதவராகி விடுகின்றார். அவர் தம் பெருமைக்கேற்ப மொழி எதற்கோ தேவைப்படுகின்றது என்று எண்ணுகிறார். மொழி அந்தந்தநாடு, மனிதன், கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவற்றின் தாரதம்மியத்தை வெளிப்படுத்தும் கருவி என்று அறிகிறார். இவற்றின் தரத்தை வெளிப்படுத்தலே மொழியின் முக்கியவேலை; இதுவே யதன் முதல்தேவை என்றும் முடிவாகக் கருதுகிறார். எனவே, அதற்கேற்ற பெருமை வாய்ந்த முறையில் அதை வளர்க்க முயல்கிறார்.

## மொழியின் தேவை

இவர் கருதுகின்ற வண்ணம் மொழி ஒரு நாட்டின் தாரதம்மியத்தை வெளிப்படுத்தற்குத்

தான் தேவைப் படுகின்றதா? மொழியின் முக்கிய வேலையும் இதுதானு?

கூட்டாகக் கூடிவாழும் மக்கள் சமுதாயத்திற்கே மொழி தேவை, ஒருவர் எண்ணத்தை, கருத்தை அல்லது மனத்தை மற்றவருக்குக் காட்ட. எண்ணத்தைப்பரிமாற்றம் செய்வதற்கே மொழி தேவை. மொழி இதற்கெனவே, வர்த்தமானம் செய்வதற்கெனவே காணப்பட்டது. அது வளர்ந்து மலர்ந்த பின்னுளிலிருந்து ஒருசமுதாயத்தாரின் தாரதம்மியத்தை வெளிப்படுத்தும் ஒரு கருவியாகவும் வேலை செய்து வருகின்றது உண்மை. ஆனுல் மொழி இதற்கெனவே காணப்பட்டது அன்று. இதற்கெனவே தேவைப்படுகின்றதும் அன்று இவ்வேலையதன் இரண்டாம் வேலையே; இஃது அதன் இரண்டாம் தேவையே. இதையே – தாரதம்மியத்தை வெளிப்படுத்தலே முதல்வேலை என்றும், அதுவேயதன் முதல்தேவை என்றும் கருதுதல் தவருகும்.

பெருமை வாய்ந்த முறையில் தமிழ்மொழியை வளர்க்க முயலும் மொழிவல்லார்கள் தமிழ் மொழியில் பிறமொழிச்சொற்கள் வந்து, புகுந்து, கலந்து, கிடப்பது தமிழ் மொழியின் பெருமைக்கு இழுக்கு என்று கொள்கிருர். தமிழில் வந்து,

புகுந்து, கலந்து, கிடக்கும் வட மொழிச்சொற்களை, ஆங்கில மொழிச் சொற்களைத் தேடித்துருவிப் பார்த்துப் பொறுக்குகிறார். தமிழ்மொழியில் ஏறியுள்ள வட மொழி ஆங்கிலமொழிச் சொற்களின் தனி அகராதி தயாரிக்கிறார். தமிழ்மொழி வழக்கிலிருந்து அவற்றை அகற்றிவிட முனைகிறார். தமிழ்மொழி வழக்கிலேறிவிட்ட வடமொழிச் சொற்களுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொல்லாக்க முயல்கிறார். 'வேதாசலம்' என்ற சொல்லுக்கு, பெயருக்கு 'மறைமலையடிகள்' என்ற சொல்லைப் படைக்கிறார். 'சூரியநாராயண சாஸ்திரி' என்ற சொல்லுக்கு, பெயருக்கு 'பரிதிமாற்கலைஞன்' என்ற சொல்லைப் படைக்கிறார். தமிழ்மொழி வழக்கிலேறிவிட்ட ஆங்கில மொழிச் சொற்களுக்கும் அப்படியே பதில் சொல்லாக்க முயல்கிறார். 'Registerar office' என்ற சொல்லுக்கு 'ஆவணக்களறி' என்ற சொல்லைப் படைக்கிறார். 'Criticism' என்ற சொல்லுக்கும் ஒரு தனித் தமிழ்ச் சொல்லாக்க முயல்கிறார்.

## தமிழுக்குக் கேடு செய்கிறார்

இவ்வாறு செய்தல் மேற்பார்வையில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உதவுவது போல் தோன்றலாம்; ஆனால் விளையும் கேடு பெரிதாகும். எப்படி?

எத்தனையோ பிறமொழிச் சொற்கள் தமிழ் மொழியின் பேச்சு, எழுத்து என்ற இருவழக்கிலும் இடம்பெற்று விட்டன. அவற்றை வழக்கிலிருந்து நீக்குதல் எவ்வகையிலும் இயலாத காரியம். ஆனால் இவரோ நீக்க முயல்கிறார். தமிழ் மொழி வழக்கில் இடம் பெற்றுள்ள பல மொழிச் சொற்களையும் நீக்குதல் ஒரு புதிய நிலைமையை உருவாக்கிவிடும்.

தமிழ்மொழியில் வடமொழி, ஆங்கிலமொழி மட்டுமல்லாமல் பல மொழிச் சொற்களும் ஏராளமாக இடம் பெற்றுள்ளன. இவர் கொள்கைக்கிணங்க அவற்றையெல்லாம் நீக்குதல் வேண்டும்; அவ்வாறு நீக்கிப்புதிய தனித்தமிழ்ச் சொற்களைப் படைத்துப் பயன் கொள்ளும் போது பேச்சு வழக்குத் தமிழ் வேறாகவும் எழுத்து வழக்குத் தமிழ் வேறாகவும் ஆகக்கூடும். இவர் படைத்த சொற்கள் கொண்ட தனித்தமிழ் எழுத்து வழக்கில் மட்டும்வரும்; பல மொழிச் சொற்கள் கொண்ட கலப்புத் தமிழ் பேச்சு வழக்கில் வரும். எழுத்து வழக்குத் தனித்தமிழ் மொழி பேச்சு வழக்கில் இருத்தல் இயலாது ஏனெனில், கல்லாத சாதாரண மக்கள் பண்டிதரும் மொழிவல்லாரும் படைத்த புதிய தனித்தமிழ்ச் சொற்களை அறிய

மாட்டார்; கற்ருேர் மட்டுமே அறிவர்; பயன் கொள்வர். அதனுல் தனித்தமிழ்மொழி 'கற்ருேர் மொழி' என்ற சிறப்புப் பெயர் பெரும்.

இருப்பினும் கற்ருேரும் பேச்சுவழக்கில் அத் தனித்தமிழ் மொழியை எந்நேரமும் எல்லாவிடத் தும் பயன் கொள்ளுதல் இயலாதது, அவரும் பேச்சு வழக்கில் கலப்புத் தமிழ் மொழியே பேசுவர். ஆயினும் இஃது இழிவான மொழி யெனவே கருதப்படும். ஒருக்கால் 'கல்லாதார் மொழி' என்ற இழிபெயரைத் தாங்க நேரிடலாம். கலப்புத் தமிழ்மொழி எத்தகைய இழிபெயரைத் தாங்கி நின்றபோதும் வழக்கழிந்து போகாது என்பது உறுதி. ஆனுல் 'கற்ருேர் மொழி' என்ற சிறப்புப்பெயர் பெரும் 'தனித்தமிழ் மொழி' பேச்சுவழக்கு அழிந்த நிலை எய்தும் என்பதும் உறுதி. இதுவே இவர் கையாளும் மொழிவளர்ச்சிக் கொள்கையால் விளையும் கேடு.

## மனித இனத்தின் பெருமை

ஒருவர் தம்தனித் தன்மையை நிலை நாட்ட வும் பெருமை கொள்ளவும் புதுமை படைத்தல் விரும்பத்தக்கதாக இருக்கலாம்; ஆனுல், அதனுல் கேடு விளையுமானுல் அதுவும் விரும்பத்தக்கதாகு மோ? 'தனித்தமிழ்மொழி' என்ற பெருமை

உலகத்தில் வேறு எம் மொழிக்குமில்லாத 'தனித் தன்மை' இவை பெறவேண்டும் என்பதற்காக இவர்கொள்ளும் மொழி வளர்ச்சிக் கொள்கை யால் விளையும் கேடு விரும்பத்தக்கதாகுமோ?

கற்ருேர் இப்போதே உடை, நடை, பாவனை பழக்கம், வழக்கம், இவற்ருல் கல்லாதாரிலிருந்து வேறுபட்டிருக்கின்றனர். இனிப்பேசும் மொழி யுமா கற்றவர்க்கென ஒன்று வேண்டும்? கற்ருேர் எல்லா வகையிலும் கல்லாதார்ரிலிருந்து வேறு பட்டு வாழ்க்கை நடத்தல் வேண்டும் என்ற கொள்கையை யான் எனது மனத்தால் விரும்ப மாட்டேன். இங்கே வாசகர்கள் என்னைத் தவருகப் புரியவேண்டாம். கல்லாதாரிடம்காணக் கிடக்கும் நாகரிகமற்ற வாழ்க்கைப் படியே கற்ற வரும் வாழ்தல் வேண்டுமென்று யான் கூற வில்லை; அதை விரும்பமாட்டேன்.

கற்றவர் கல்லாதாரிலிருந்து ஒதுங்கி நின்று வாழ்க்கை நடத்தல்வேண்டும் என்ற கொள்கை கற்றவர்க்கென ஒரு மொழி தனியே வேண்டும் என்ற கொள்கை 'மனிதன்' என்ற உயர்ந்த ஓரினத்தை இரண்டாகப் பிளக்கின்றது. மக்கள் கூட்டத்துடன் ஒட்டிப்பழகும் முறையைக் கற் பிக்க மாட்டாத கல்வி, படிப்பு எத்தகைய

சிறப்புடையதாயினும் மனிதனுக்குத் தேவையற்றது என்று யான் துணிந்து கூறுவேன். எத்துறையில் நாம் என்னென்ன கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் அவை 'மனிதன்' என்ற பெருமை வாய்ந்த இனத்திற்கு எவ்வகையிலாவது கேடு விளைக்குமானால் அவற்றை 'மனிதன்' விரும்பமாட்டான்: விரும்புகின்றவனும் 'மனித'னாக மாட்டான். இதை எவரும் எந்நேரத்திலும் எச்செயலிலும் நினைவில் கொள்ளல் வேண்டும். மனித இனத்தின் பெருமையைக் காப்பது மனிதன் என்று சொல்லப்படுகின்ற ஒவ்வொருவனுக்கும் கடமை.

இவ்வொரு வகையால் மட்டும் தமிழ்மொழி வல்லார்கள் தமிழ்மொழிக்குக் கேடு செய்கிறார் என்றில்லை. தமிழ்மொழி வளர்ச்சி முறை சார்ந்த பல கொள்கைகளாலும் இவர் கேடு விளைக்கிறார். அதுவும் தமிழ்மொழிக்கு மட்டுமா? இல்லையில்லை, தமிழ்மொழிக்கு, தமிழ் நாட்டுக்கு, தமிழ்ப்பொது மக்களுக்குக் கேடு விளைக்கிறார் இவர் சிந்தனையையும் செயலையும் நினைக்குந்தோறும் எனது நெஞ்சம் குமுறுகின்றது. இவர் இனி எப்படித்தான் சிந்திக்கின்றாரோ? இவர் சிந்திக்கும் முறைதான் என்னவோ?

## வட நாட்டாரைச் சாடுகிறார்

அண்மையிலுள்ள வடநாட்டுடன் தென்னாடு உறவு கொண்டது என்றேன். அவ்வுறவால் விளைந்தன பல நன்மைகள். தமிழ்க்கலைகள் வட கலைகளுடன் கலந்து சிறந்தன. தமிழ்மொழி எண்ணற்ற வட மொழிச் சொற்களைப் பெற்று வளமுள்ளதாகியது. இதேபோல. தமிழ்மொழியில் பல வட மொழிக் கருத்துக்கள் கொண்ட நூல்கள் எழுந்தன வடமொழிப் புலவர்கள், பண்டிதர்கள் சிலர் தமிழ் மொழிக்குத் தொண்டு செய்தார்கள்.

இதனை-வடமொழிப் புலவரும் பண்டிதரும் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டினை இன்று தமிழ் மொழிவல்லார்கள் தவறாக எடுத்துக் கொள்கிறார்; வடமொழியார் தமிழ்மொழிக்குக் கேடு செய்ததாக எடுத்துக்கொள்கிறார்.

எடுத்துக்காட்டாக ஒன்று பார்ப்போம் திருக்குறளுக்குச் சிறந்த உரைகண்ட பேராசிரியர் பரிமேலழகர் ஒரு வட மொழிப் பண்டிதர். அவர் திருக்குறளுக்கு உரைகண்டது தமிழ்மொழிக்குச் செய்த பெருந் தொண்டாகும். ஆனால், இன்று மொழிவல்லார்கள் பலர் அவர் செய்ததைத்

தொண்டு என்று கொள்கின்றார்களில்லை; வட மொழிக் கருத்துக்களையும் கொள்கைகளையும் தம்முரை மூலம் வலியத் திணித்துத் தமிழ்மொழிக் கருத்துக்களையும் கொள்கைகளையும் கெடுத்தார் என்று கருதுகிறார். திருக்குறளுக்கு இன்று உரை காணும் உரையாசிரியர் பலரும் பரிமேலழகர் மேல் இதே குற்றத்தை (பரிமேலழகர் வட நூல் கருத்துக்களையும் கொள்கைகளையும் தம்முரையில் திணித்துக் கெடுத்து விட்டார் என்ற குற்றத்தை) சுமத்திப் புதியஉரையின் அவசியத்தை வலியுறுத் துகிறார்.

உண்மையில் திருக்குறளின் ஆசிரியரான வள்ளுவர் காலத்தில் வட மொழி நூல்களுக்கும் தமிழ்மொழி நூல்களுக்கும் பொதுவாகப் பல கருத்துக்கள், கொள்கைகள் இருந்தன என்பதை அறிகின்றாரில்லை. 'இந்திரன்' என்ற தெய்வம் வட வர்க்கும் தென்னவர்க்கும் பொதுவாக இருந்தது இதனை வள்ளுவர் வாய் மொழியே குறிக்கின்றது. 'இந்திரனே சாலுங்கரி' என்று கூறுகிறார். இதற் கென்ன கூறுவது? 'ஒருக்கால் இச்சொல்லையே பரிமேலழகர் இடையில் செருகிவிட்டாரோ?' இவர் சிந்தனையே இன்று இப்படித்தான் ஓடுகின்றது.

தமிழுக்குக் காலமெல்லாம் தொண்டு செய் தார் டாக்டர். உ. வே. சுவாமிநாத ஐயர். இன்று தமிழ்மொழியின் பெருமை பேசுவோர் அவருக்குக்

கடமைப் பட்டவர்கள். ஆனால் நம்மவர் எப்படி இருக்கிறார்கள்? சுவாமிநாதஐயர் வடமொழிக் கருத்துக்களைத் தமிழ் நூல்களில் புகுத்திவிட்டதாகவும், பழம் பாடல்களின் வார்த்தைகளையே அதற்கேற்பத் திரித்து விட்டதாகவும், தமிழர் கருத்து, கொள்கை, பண்பாடு இவற்றைக் கெடுத்து விட்டதாகவும் எடுத்துக் கொண்டுள்ளார். இவரிடம் வளர்ந்து முதிர்ந்துவிட்ட குறுகிய மனப்பான்மையால் பிறந்த நோக்கு இது.

திருக்குறளுக்கு இன்று இவர் உரை காண்பதில் இவரது கருத்து வளர்ச்சிக் கோணல் முறை காணக்கிடக்கின்றது; அது பற்றிச் சில வார்த்தைகள் பேசுவேன்.

பரிமேலழகர் உரை வட நூல் கருத்துக்கள், பொருந்தாத கருத்துகள் கொண்டது என்று கூறிக்கொண்டு புத்துரைகள் காண்கிறார். ஒரு நூலின் சரியான உரை என்றால் அந்நூலாசிரியரின் கருத்துக்களைத் தரும் உரைதானே? இவர் எப்படி உரை காண்கிறார்? இருபதாம் நூற்றாண்டுக்கும் தமக்கும் பொருத்தமாகத் தோன்றும் கருத்துக்களைக் கொண்டு உரை காண்கிறார். இவையெல்லாம் வள்ளுவர் கருத்துக்கள் கொண்ட உரைகளாமோ? இந்நாளோ விஞ்ஞானம் வளர்ந்துள்ள நாள்; நாகரிகம் மலர்ந்து

உள்ள நாள்; பலகலைகளும் தோன்றிப் பெருகி யுள்ள நாள். இந்நாள் கருத்துக்களை எப்படிப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் கூறி யிருக்க முடியும்? கூறியிருக்க முடியாது. * பின் ஏன் இப்படி உரை எழுதுகிறார்?

இவ்வாறு உரை எழுதுவதன் மூலம்தான் இவர் தம்சாமர்த்தியத்தை,திறமையைக் காட்டிக் கொள்கிறார். 'திருக்குறளில் சிறந்த நூலில்லை. வள்ளுவரில் சிறந்த ஆசிரியனில்லை. குறள் நூல் எக்காலத்தும் பொருந்துவது' என்று பேசிக் கொண்டே வருகிறார்; அதே நேரத்தில் குறள் நூல் கருத்துக்கள் பொருந்தாதவை, ஒவ்வாதவை ஆகிக் கொண்டிருக்கின்றன, காலத்தின் வேகத் தால். எக்காலத்தும் பொருந்துவது' என்ற கூற்று ஒவ்வொரு விநாடியிலும் பொய்யாகி வருகின்றது. கண்மூடித் தற்பெருமை கொள்ளும் இவர். பொய்யாகி விடாது காக்க முயலுகிறார். ஒவ் வொரு விநாடிக்கும் பொருந்தக் கூடிய கருத்துக் களைக் கொண்டு புதிது புதிதாக உரைகளை எழுதி க்கொண்டே போகிறார். இவர் எழுதும் உரைக்

* வள்ளுவர் சிறந்த அறிஞர்; ஏன் சொல்லியிருக்கக்கூடாது என்று கடாவ விரும்பும் வாசகர்கள் யான் எழுதும் "நாமெங்கே வள்ளுவரெங்கே!" என்னும் நூலை படித்தல் வேண்டும்.

கருத்துக்கள் வள்ளுவர் கருத்துக்கள் அல்ல. இதை இவரும் அறிவார். இருப்பினும், குறள் நூல் கருத்துக்கள் பொருந்தாதன என்று இவர் கூறவே மாட்டார். ஏன்?

குறள் நூல் கருத்துக்கள் பொருந்தாதன என்று கூறினால் பெருமைக் குறைவு என்று எண்ணுகிறார். குறள் நூல் கருத்துக்கள் பொருந்தாதன என்று காட்டினால் பொருந்தக்கூடிய வேறு கருத்துக்களைக் கொள்ளல் வேண்டும். பொருந்தக்கூடிய வேறு கருத்துக்கள் ஆங்கில மொழி நூல்கருத்துக்களாகத்தாம் இருக்கக்கூடும்; ஏனெனில், அம்மொழி நூல்கள் தாம் அண்மையில் விஞ்ஞான ஆராய்ச்சிகள் கண்ட புதிய கருத்துக்களைக் கொண்டுள்ளன. பிறமொழி நூல் கருத்துக்களை, தமிழ் மொழிநூல் கருத்துக்களைத் தள்ளி ஏற்றுக் கொள்வாரோ? இவர் கொள்கைக் கிணங்க இது பெருமைக் குறைவல்லவோ? எனவே தான் குறள் கருத்துக்கள் பொருந்தாதன என்று காட்டாமல்,புதிய கருத்துக்களையும் நேரே ஏற்றுக் கொள்ளாமல், புதிய கருத்துக்களை வள்ளுவர் கருத்துக்களாகக் கூறிப் பொய்யுரை கண்டு ஏற்றுக்கொள்கிறார். உண்மையிலேயே காலத்தால் கெட்டுப் போனது பற்றிப் பேசும் போது வள்ளுவர் கருத்துக்களே கெட்டுப் போயின,

ஒவ்வாமற் போயின என்று கூறுது பரிமேலழகர் உரைதான் கெட்டுப்போனது என்று கூறுகிறார்.

இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து யான் இப்பகுதியில் எடுத்துக் காட்டிய வண்ணம் நம் தமிழ்ப் புலவர்களும், பண்டிதர்களும், ஏனைய மொழிவல்லாரும் பெருமையே பேசி வருகிறார். இன்று இவரது பெருமைப் பேச்சுக்கள் வரம்பு கடந்து விட்டன. இவர் பெருமைப் பேச்சிலிருந்து, பெருமித எண்ணத்திலிருந்து தவறான மொழி வளர்ச்சிக் கொள்கை பிறந்து விட்டது; தவறான கருத்து வளர்ச்சிக் கொள்கை பிறந்து விட்டது. இத்தவறான மொழி வளர்ச்சிக் கொள்கை, வேறு எந்நாடும், எம் மொழியும், எம் மொழிநூல் கருத்துக்களும், எம் மொழியாரும்' தமிழ் மொழியுடன் உறவு கொள்வதைக் கண்டிக்கின்றது. அத்தோடு உறவு கொள்ளவரும் பிற நாடு, பிறமொழி, பிறமொழி நூல் கருத்துக்கள், பிறமொழியார், தமிழ் நாட்டையும், தமிழ் மொழியையும், தமிழரையும், அவர் கருத்து, கொள்கை, பண்பாட்டையும் கெடுக்க வருவதாகக்கருதச் செய்கின்றது.

இக்குறுகிய பார்வைக்கு, தவறான பார்வைக்கு தமிழ் நாட்டுக்கு அருகில் அமைந்துவிட்டதால் உறவு கொண்ட வட நாடும், வடமொழியும் அம்மொழிக் கருத்துக்களும், கொள்கைகளும், அந்நாட்டாரும் இலக்காயினர்.

# தமிழர்களும் அவர்கள் எண்ணங்களும் கருத்துக்களும்

மொழி வளர்ச்சி, கருத்து வளர்ச்சிக் கொள்கைகள் சார்ந்த தமிழர்களின் தவருன பார்வைக்கு தமிழகத்திற்கு அருகில் அமைந்துவிட்டதால் உறவு கொண்ட வட நாடும், அந்நாட்டு மொழியும், அம்மொழிக் கருத்துக்களும் கொள்கைகளும், அந்நாட்டாரும் இலக்காயினர். இது தமிழர்களின் உள்ளத்தில் எவ்விதமான உணர்ச்சியையும் எண்ணத்தையும் ஏற்படுத்தாமலில்லை; ஏதோவொரு உணர்ச்சியை, எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளது.

## தமிழர் எண்ணம்

'வடமொழி தமிழ்மொழியின் தூய்மையைக் கெடுத்தது. வட மொழிக் கருத்துக்கள், கொள்கைகள் தமிழ் மொழிக் கருத்துக்களையும் கொள்கைகளையும் கெடுத்து மாசுபடுத்தின. வடவர் நம் கருத்துக்களையும் கொள்கைகளையும் கெடுத்ததோடல்லாமல் நம்மையும் மயக்கினர். தனியான

பெருமையான நமது கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் அழித்தார்கள். நமது தமிழ் நாட்டில் அவர் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் நிலைப்படுத்தி விட்டார். வடவர் என்றைக்கும் நம்மைப் பலவகையிலும் கெடுப்பவர்களே.'

இத்தகைய ஒரு எண்ணம் தமிழர்கள் உள்ளத்தில், குறிப்பாகத் தமிழ்ப் பற்றுமிக்கவரிடம் தோன்றியுள்ளது. இவ்வெண்ணம் வடநாட்டாருக்கும் நமக்கும் உள்ள நல்லுறவைப் பாதிக்கின்றது

## ஒற்றுமைக்குக் கேடு

கி. பி. 1947-லிருந்து இந்திய நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது. இது தன் போக்கைத்தானே தீர்மானித்துக் கொள்ளும் பிறப்புரிமையை அன்றிருந்து பெற்றுள்ளது. இந்திய நாடு என்ற சொல் தமிழ் நாட்டையும் சேர்த்துக்கொண்டுள்ளது. தமிழ்நாடு ஒரு மாகாணமாக (சென்னை மாகாணமாக) இந்திய நாட்டில் இடம் பெற்றுள்ளது. எனவே இன்று தமிழ்நாடு வட நாட்டுடன் ஐக்கியப்பட்டிருக்கின்றது. எனவே இந்திய நாட்டு மக்கள் அனைவரும் இன்று ஒரே நாட்டு மக்களாக இருக்கிறோம். மாகாண அரசாங்கங்கள் உள்ள போதிலும் நாடு ஒன்றே; நாட்டு மக்களும் ஒன்றே.

ஆனால் நம் தமிழர் மட்டும் இத்தகைய தவறான எண்ணம் கொண்டிருத்தலால் வடவருடன் கொண்டிருக்கும் உறவு பல வகையால் தமிழர்க்குக் கேடு என்று கருதுகிறார். இத்தகைய உறவு கொண்டிருத்தலால் வடவர் மொழி தமிழ் மொழியை ஆட்சிபுரியத் தொடங்கும் என்று எண்ணுகிறார். தமிழர் கலாச்சாரம் பண்பாடு இவை முற்றிலும் அழிக்கப் பட்டுப் போகும் என்று எண்ணுகிறார்.

இவர்களின் இத்தவறான எண்ணங்களிலிருந்து பிறந்ததுதான் 'திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டும்' என்னும் அரசியல் கட்சி. இவர்-திராவிடநாடு கேட்போர் பேசுவது தமிழ்நாடு மட்டும் பற்றியல்ல; திராவிட நாடு பற்றி. இருப்பினும் இத்தவறான எண்ணங்களிலிருந்தே இது பிறந்தது. 'திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டும்' என்போரில் பெரும்பாலோர் தமிழர்கள்; ஆந்திரர்களோ கேரளத்தார்களோ அல்லர். இது கவனிக்கத்தக்கது மட்டுமல்ல ஏன் என்று ஆராய்தற்குமுரியது.

## திராவிடர் கழகங்கள்

இங்கே திராவிட நாடு வேண்டும் என்பவர் பற்றிச் சிறிது அறிந்து கொள்வோம். அநேகமாக

இவர்கள் எல்லாரும் தமிழர்கள். 'அன்றும் இன்றும் திராவிட நாடு வேறு; ஆரிய நாடு வேறு. என்றுமே திராவிடர் மொழி வேறு; ஆரியர் மொழி வேறு. திராவிடர் கலாச்சாரம் வேறு; பண்பாடு வேறு; ஆரியர் கலாச்சாரம் வேறு; பண்பாடு வேறு. தென்னாடு (திராவிட நாடு) வட நாட்டுடன் (ஆரியநாட்டுடன்) ஐக்கியப்பட்டிருக் கின்றது என்பது அர்த்தமற்றது. வடநாடு தென்னாட்டைச் சுரண்டுகின்றது. எனவே திராவிட நாடு தனி நாடாக வேண்டும்; தனி யாட்சி பெறவேண்டும்'. இதுவே இவர் கொள்கை.

## எனது எண்ணம்

தமிழர் என்னும் எல்லாரும் இதே எண்ணம் கொண்டவரல்லர். உதாரணமாக என்னையே எடுத்துக்கொள்ளலாம். யான் வேறு எண்ணம் கொண்டவன். ஆரிய மொழி மட்டுமல்ல, ஆங்கில மொழிமட்டுமல்ல, வேறு எம்மொழியும் தமிழ் மொழியை ஆட்சி செய்வது இயலாத காரியம். ஒரு மொழி பிரிதொரு மொழியை ஆட்சி செய்தல் என்பதே நடைமுறைக்கு அப்பாற் பட்டது என்று எண்ணுகிறேன். 'உலகத்து நாடு கள் பலவும் மக்கள் பலரும் உறவு கொண்டு வாழ்தல் வேண்டும்' என்னும் பெரு நோக்கம்

கொள்ளும் இந்நாளில் 'தமிழ்மொழி பிறமொழி யுடன் உறவு கொள்ளல் கூடாது' என்பது எப்படிப் பொருந்துமோ, எனக்கு விளங்கவே யில்லை.

தமிழர் கலாச்சாரம் பண்பாடு இவற்றைக் கெடாது காத்தல்வேண்டும் என்னும் எண்ணமும் எனக்கில்லை எவ்வகையாலும் இவை கொஞ்ச மும் கெடாது (மாற்றமடையாது) காத்தல் இயலாத காரியம் என்பது யானறிவேன். கலாச் சாரம், பண்பாடு இவற்றைக் கெடாது (மாற்ற மடையாது, குறையாது, அழியாது) காத்தல் வேண்டும் என்பவர் உண்மையில் எத்துறையிலும் எவ்வகையிலும் மாற்றத்தை விரும்பாதவரே. கலாச்சாரம், பண்பாடு இவ்விரண்டும் மாற்றத் தை ஏற்றுக்கொள்ளாமல் போகுமானால் உலக மக்களுக்குப் பல துறைகளில் ஆராய்ச்சி தேவை யற்றுப்போகும்; கலைகள் வேண்டாதனவாகும்; விஞ்ஞானம் ஒரு பலனை இழந்து நிற்கும். •

தமிழர் கலாச்சாரமும் பண்பாடும் மனித கலாச்சாரம், பண்பாடு என்னும் இவ்விரண்டின் மலர்ந்த நிலையை-மனித நாகரிகத்தை அடையும் வகையில் ஒவ்வொரு விநாடியிலும் மாற்றத்தை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்பதுவே எனது எண்ணம்; விருப்பம்.

எனவே, வடக்கிலிருப்போரோ ஆரியரோ அல்லது மேற்கிலிருப்போரோ ஆங்கிலேயரோ தமிழ்மொழி, தமிழர் கலாச்சாரம், தமிழர் பண்பாடு இவற்றுக்குக் கேடு விளைக்கிறார் என்று யான் எண்ணவில்லை. வடக்கிலிருக்கும் ஆரியருடன் ஐக்கியப்பட்டிருப்பதால், மேற்கிலிருக்கும் ஆங்கிலேயருடன் உறவு கொள்வதால் தமிழ் மொழி, கலாச்சாரம், பண்பாடு இவையெல்லாம் மனித நாகரிகம் என்னும் மலர்ந்த நிலையை அடைவதற்கேற்ற வகையில் மாற்றம் கொள்கின்றன என்றே எண்ணுகிறேன். எனவே வடக்கிலிருக்கும் ஆரியர்மீதோ அல்லது மேற்கிலிருக்கும் ஆங்கிலேயர்மீதோ எனக்கு எத்தகைய வெறுப்புமில்லை.

## உலகப் பொதுமக்கள் எண்ணம்

ஆனால் எனதுள்ளத்தில் எத்தகைய வெறுப்புணர்ச்சியும் இல்லாமல் இல்லை. ஏதோவொரு வெறுப்புணர்ச்சியுண்டு. தமிழர் சமுதாய அமைப்பு முறைமீது எனக்கு வெறுப்புணர்ச்சியுண்டு. இச்சமுதாய அமைப்பு முறையை யான் வெறுக்கிறேன். மூலதனத்தைக் குவித்து வைத்திருப்போர் மூலதனமின்றிக் கையும் காலும் உடல் சக்தியும் கொண்டு உழைக்கின்ற கூட்டத்

தாரைச் சுரண்டும் உரிமை தமிழர் சமுதாயத்தில் பறிக்கப்படாமல், ஏன், சிறிதும் கட்டுப்படுத்தப் படாமலே இருக்கின்றது. இக்கட்டுப்பாடும் நியதியுமற்ற சமுதாய நிலையை வெறுக்கிறேன். இக்கட்டுப்பாடற்ற சமுதாயத்தில் உற்பத்திக் கருவிகள் (மூலதனம்) வைத்திருப்போர் உழைப் போரைச் சுரண்டிக்கொழுக்கிறார். மூலதனமின்றி உழைப்போர் வாடி வதங்குகிறார்.

இந்த மேடுபள்ளமான, உயர்வு தாழ்வான நிலை நம் தமிழ் நாட்டில் மிகப் பிதுக்கமாகத் தோன்றுகின்றது. மக்கள் வாழ்வு நசித்துக் கொண்டு வருகின்றது. இந்த ஏற்றத்தாழ்வின் வளர்ச்சியால் இந்த ஏற்றத்தாழ்வுக்குக்காரணம்? இந்த ஏற்றத்தாழ்வே பொருளாதாரத்தை அடிப் படையாகக் கொண்டது. எப்படி? மூலதனம் வைத்திருக்கும் முதலாளிகளே சுரண்ட முடி கின்றது; சுரண்டுகின்றவர் முதலாளிகள். மூல தனமின்றி உழைக்கும் தொழிலாளரே சுரண்ட முடிகின்றதில்லை; சுரண்டப்படுவோர் தொழிலா ளர்கள். தொழிலாளி, முதலாளி என்னும் வேற்றுமை மனிதர்களிடமிருந்து அகற்றப்பட வேண்டும் என்பதுவே எனது எண்ணம்.

உலகிலுள்ள பல நாட்டு மக்களின் எண்ண மும் இன்று இதுவே. காரணம் இன்று உலகம் முழுதும் மனிதர் சமுதாயத்தில் தொழிலாளி, முதலாளி என்னும் வேற்றுமையே பிதுக்கமாகத்

தோன்றுகின்றது. இவ்வேற்றுமை மலிந்த சமுதாய நிலைமையிலிருந்து அதற்கேற்ப இவ்வெண்ணம் தோன்றுகின்றது; இது சரியானது. ஆனால் நம் தமிழர் சமுதாயத்தில் தொழிலாளி, முதலாளி என்னும் வேற்றுமை மலிந்து கிடந்தபோதும் தமிழர்களிடையே இவ்வேற்றுமையை அகற்ற வேண்டும் என்னும் எண்ணம் மேலோங்கவில்லை; திராவிடநாடு தனியாக வேண்டும் என்னும் எண்ணம் மோலோங்கி வருகின்றது.

நம் தமிழர் கொண்டுள்ள எண்ணம் போல் வேறு எந்நாட்டாரும் எண்ணம் கொண்டிருக்கவில்லை இன்று. பல இராஜ்ஜியங்கள் ஒன்றாக ஐக்கியப்பட்டுள்ள ஒரு கூட்டு அரசாங்கத்துடன் இணைந்தது தமிழ்நாடு. தமிழ்நாடும்தான் சேர்ந்துள்ள மத்திய அரசாங்கத்துக்குத் தன் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றது. இந்நிலையில் தமிழ் நாட்டை அதனுடன் ஐக்கியப்பட்டிருக்கும் வட நாடு எப்படிச் சுரண்டமுடியுமோ? ஒரே ஐக்கியத்துள் சேர்ந்துள்ள எந்நாடும் மற்றதைச் சுரண்டுதல் இயலாதது. ஆனால் ஒன்று நடைபெறுதல் கூடும். மத்திய அரசாங்கங்களின் கெடுபிடி மாகாண அரசாங்கங்களின் மீது கடுமையாகக் கூடும். இப்பிரச்சினையும் அவைகளே தீர்த்துக் கொள்ளக் கூடியது.

## தமிழர் எண்ணத்தில் தெளிவில்லை

வட நாட்டார் மொழி தமிழ் மொழியை ஆட்சி கொள்ளும்; வட நாட்டார் கலாச்சாரம், பண்பாடு தமிழர் கலாச்சாரம், பண்பாடு இவற்றை அழித்துவிடும் என்பதுவே தமிழர் எண்ணம்.

இவ்வெண்ணத்தைக் கொண்டு தமிழர் சிலர் திராவிட நாடு கேட்கிறார். சிலர், திராவிட நாடு தமிழ் இராஜ்ஜியம் மட்டுமல்லாமல் ஆந்திரம், மலையாளம் என்னும் இராஜ்ஜியங்களையும் கொண்டிருத்தலால், அது கேட்கத்து ணியாமல் ஒரு வகையாக இருக்கிறார். தமிழ் நாடு கேட்கும் துணிவும் அவர்களிடம் இல்லை. ஆனால் தமிழ் நாட்டுக்கு எனத் தமிழர்களுக்கு என வொரு தனிக் கட்சியைக் கட்டிக் கொண்டார். 'தமிழரசுக் கழகம்' எனப் பெயரும் கொண்டுள்ளார்.

இன்னும் சிலர் இவ்விரு கழகங்களிலும் (திராவிடர் கழகங்கள், தமிழரசுக் கழகம்) சேராமல் தனித்து இருக்கிறார். இவருக்கு இவ்விரு கழகங்களின் கொள்கைகளிலும் செயல்களிலும் நல்லெண்ணமும் நம்பிக்கையும் இல்லையோ என்னவோ! இவர் ஏதேதோ பேசுகிறார். 'தமிழ் நாடு மற்ற இந்திய நாடுகள் பலவற்றைக் காட்டிலும்

பின்தங்கிக் கிடக்கின்றது. தமிழ் நாடு மற்ற இந்தியநாடுகளுக்கு இணையாக இழுத்துச் செல்லப்படுகிறதில்லை. இந்திய அரசாங்கப் பொது மொழியாக எம்மொழி இருக்கவேண்டும் என்னும் பிரச்சினைக்கு முடிவுகாணுகையில் தமிழ் மொழியை வீழ்கடிக்கும் முடிவையே தேர்ந்தெடுக்கிறார். மத்திய அரசாங்கமே வட நாட்டார் அரசாங்கமாகத் திகழ்கின்றது. அது இருக்குமிடமும் வட நாடு. வட நாட்டார் கண்ட இந்திய மத்திய அரசாங்கம் தமிழ் நாட்டுக்குப் பல வகையிலும் ஓரவஞ்சகம் செய்கின்றது; இவ்வாறு ஓலமிடுகிறார்.

## தமிழர் எப்படி இருத்தல் வேண்டும்?

யான் வேண்டுவதெல்லாம் நம் தமிழர் எண்ணத்தில் தெளிவுகாண வேண்டும்; திட்டம் காணவேண்டும்; துணிவு கொள்ளல் வேண்டும் என்பதே. உலகிலுள்ள பிற நாட்டு மக்கள் மீது நம்பிக்கை வைக்கும் துணிவு பெறுதவராக நாம் ஒருக்காலும் இருத்தல் கூடாது. அவ்வாறு இருத்தல் நாம் பெரும்பண்பாடுடையவர் என்று கூறிக் கொள்ளுதற்கு நேர் முரணானதாகும். நாம் கொள்ளும் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் பிறர் மீது நம்பிக்கை வைக்கும் துணிவான எண்ணத்தை நம்மிடமிருந்து அகற்றிவிடக் கூடாது.

'பிறருடன் நாம் கொள்ளும் உறவு நமக்குப் பல வகையில் கேடுதருமோ' வென்னும் சஞ்சல மனப் பான்மையுள்ளவர்களாக நாம் ஒருக்காலும் இருத்தல் கூடாது.

உலகத்தாருடன் உறவு கொள்ள நாம் விரும்ப வேண்டும். நாம் கொள்ளும் உறவு முற் போக்கான இடத்திற்கா அல்லது பிற்போக்கான இடத்திற்கா, எங்கே இழுத்துச் செல்கின்றது என்று திட்டமாகக் கணிக்கும் ஆற்றலை நாம் பெறவேண்டும். நமக்குக் கேடு வராத வகையில் உறவு வளர்ந்து செல்லும் வண்ணம் பார்த்துக் கொள்ளல் வேண்டும். வீணான சந்தேகங்களும் சஞ்சலமும் நம்மை அணுகாதபடி பார்த்துக் கொள்ளல் வேண்டும். இவற்றிற்கெல்லாம் முதலாக எண்ணத்தில் துணிவு வேண்டும். இத் துணிவு நம் தமிழர்களிடையே குறைந்து கிடப் பது வருந்தத்தக்கது.

## இஃது இழிதொழில்

பெரும் பான்மையான வட நாடுகள் ஒரே நோக்குக் கொண்டு தமிழ் நாட்டை அவற்றுக்கு இணையாக இழுத்துச் செல்லாதிருக்குமானால் இது பெரும் மோசம் செய்யும் செயலாகும். பெரும் மூலதனம் வைத்துக் கொண்டு உழைப்போரைச் சுரண்டுதல் இன்று உலகமக்களால் இழி தொழில்

என்று கருதப்படுகின்றது. மத்திய அரசாங்கத்திலுள்ள பெரும்பாலான நாடுகள் ஒரு நோக்குக் கொண்டு ஒரு நாட்டை (ஒரு மாகாணத்தை) பின் தங்க விடுமானால், இப்பெரு மோசம் செய்யும் செயல் மூலதனம் வைத்துக் கொண்டு சுரண்டுதலினும் இழிவான தொழிலாகும். உலக மக்களால் இஃது அப்படியே கருதப்படும்; நிந்திக்கப்படும்.

## தமிழர் கருத்துக்கள்

தமிழர் கொண்டுள்ள கருத்துக்கள் அநேகமாகத் திருக்குறள் தரும் கருத்துக்களாகவோ அல்லது பண்டைய காலச் சங்கத்து நூல்கள் தரும் கருத்துக்களாகவோ இருக்கின்றன. தமிழர் உயிர் போன்றது திருக்குறள். சில மன்னர்களின் உயிர் கிளியின் உடலில் இருப்பதாகச் சொல்லப் படும் பழங்கதைகள் கேட்டிருக்கிறேன். அதே போலத் தமிழர்களின் உயிர்தான் திருக்குறளில் இருக்கின்றது போலும்!

குறளிலுள்ள கருத்துக்கள் எல்லாம் அநேகமாக, பொருந்தாதவை, அறிவியலுக்கு அப்பாற்பட்டவை, வெற்று வார்த்தை உபதேசம், சாதாரணமான பயனற்ற உண்மை என்ற பல

வகையானவை. இன்று நமக்குள்ள பிரச்சினை களில் எதற்கும் ஒரு முடிவு காணக் குறள் கருத்துக்கள் நமக்கு வழிகாட்டமாட்டா. அவ்வளவு மோசமாக அவைகள் காலத்தால் கெட்டுப்போனவை. இருப்பினும் தமிழர்கள் இத்தகைய ஒவ்வாத குறள் கருத்துக்களைத் தங்கள் மந்திரமாகக் கொண்டுள்ளனர்.

இங்கே ஒன்று குறிப்பாக நோக்கவேண்டும். புலவரும், பண்டிதரும், மொழிவல்லாரும், மொழிப்பற்று மிக்காரும், சாதாரண மக்களும் மட்டும் இப்பழங் கருத்துக்களைக் கொண்டிருக்க வில்லை. தமிழர் அரசியல் கட்சித்தலைவர்கள் அத்தனை பேரும் இப்பழங்கருத்துக்களையே கொண்டிருக்கிறார். அறிஞர் என்று சிறப்பித்துச் சொல்லப் படுகின்றவரும் இப்பழங்கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்!

தமிழர் அரசியல் கட்சித்தலைவர்கள் பழங் கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் அரசியல் கட்சிகளை அப்பழங்கருத்துக்களை அடிப் படையாகக் கொண்டு நடத்திச்செல்கிறார்களோ? தமிழர் அரசியல் கட்சிகள் அப்பழங்கருத்துக்களை கொண்டு இயங்குகின்றனவோ?

## தமிழர் அரசியல் கட்சிகளின் கருத்துக்கள்

தமிழர் அரசியல் கட்சிகள் பழங்கருத்துக் களை (குறள் கருத்துக்களை) அடிப்படையாகக்

கொண்டு இயங்காதிருக்கலாம்; ஆனால் அவைகள் அப் பழங்கருத்துக்களுக்கு நேர் மாறான கருத்துக் களை (சோஷலிஷக் கருத்துக்களை அல்லது கம்யூனி ஷக் கருத்துக்களை) அடிப்படையாகக் கொண்டு இயங்க மாட்டா; இயங்கவுமில்லை. ஏன்?

தமிழர் அரசியல் கட்சிகள் தமிழர் கலாச் சாரம், பண்பாடு இவை காக்க எனவே பிறந்த வைகள் எனவே அவை அவற்றைக் காத்தல் கடமை. எனவே அக்கட்சித் தலைவர்கள் தமிழர் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம், மேன்மை இத்தனையும் பொதிந்து கிடக்கும் பண்டைய தமிழ் நூல்களைப் பெரிதுபடுத்திப் பேசி, அவை கூறும் கருத்துக்களைப் பரப்புகிறார். அதே நேரத் தில் அந்நூல்களில் காணக்கிடக்கும் பொருந்தாக் கருத்துக்களை எடுத்துப் பேசுகின்றாரில்லை; அதா வது பொருந்தாமை கருதாமல் பழங்கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொண்டு பரப்புகிறார். இவ்வாறு தனிப்பட்ட முறையில் பழங்கருத்துக் களைப் பரப்பிவரும் தலைவர்கள் கட்சியினுள் அப்பழங்கருத்துக்களுக்கு நேர்மாறானகருத்துக்களை அடிப்படையாகக் கொள்ளுதலும், அவை காட்டும் வழியில் கட்சியை இயக்குதலும் கூடாத காரியம்.

இதற்கொரு உதாரணம் காட்டி விளக்கு வேன்; வாசகர்கள் என்னை அனுமதிக்கவேண்டும். இந்திய நாட்டின் கலாச்சாரம், பண்பாடு, நாக ரிகம் இவற்றைக் காத்தலே நோக்கம் என்றளவுக் குக் காங்கிரஸ் கட்சியை வளர்த்துச் சென்ற கட்சிப் பெருந்தலைவர் காந்தி, இந்து மதத்தின் பெருமையை இரவும் பகலும் ஓதி வந்தார். பகவத் கீதையைப் பெரிதுபடுத்திப் பேசி, பொருந்தாமை கருதாமல், பொருந்தாமையை எடுத்துப் பேசாமல் அந்நூல் தரும் பழங்கருத்துக்களைப் பரப்பி வந்தார். எனவே, அவர் ஒப்பற்ற தலைவராக விளங்கியபோதும் பகவத்கீதை, பாரதம், இராமா யணம் போன்ற நூல்கள் தரும் பழங்கருத்துக் களுக்கு நேர்மாறான கருத்துக்களை (சோஷலிஷக் கருத்துக்களை அல்லது கம்யூனிஷக் கருத்துக்களை) கட்சியின் கருத்துக்களாக்க முடியாதிருந்தார்; இப் புதிய கருத்துக்கள் காட்டும் வழியில் கட்சியை இயக்குதலும் அவர்க்கு இயலாதிருந்தது. ஆகவே முன்னேற்றம் பற்றிப்பேச நேர்ந்தபோதெல்லாம் 'ராம்ராஜ்ஜியம்', 'சர்வோதயம்' என்று ஏதேதோ பேசி வந்தார்.

காந்தி பகவத்கீதையைப் பெரிது படுத்திப் பேசி, அது தரும் கருத்துக்களை ஒவ்வாமை கருதா மல் பரப்பி வந்தது போலத் தமிழர் அரசியல்

கட்சித்தலைவர்கள் திருக்குறளைப் பெரிது படுத்திப் பேசி, அது தம் கருத்துக்களைப் பொருந்தாமை கருதாமல் பரப்பி வருகிறார்; மற்ற ஒவ்வாத பழந்தமிழ் நூல் கருத்துக்களையும் பரப்பி வருகிறார். எனவே, கட்சிக்குள் இப்பழங்கருத்துக்களுக்கு நேர்மாறுபட்ட கருத்துக்களைப் புகுத்த முடியாமலிருக்கின்றனர்.

ஆகவே, தமிழர் அரசியல் கட்சிகள் பழங் கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்களை-சோஷலிஷக் கருத்துக்களையோ கம்யூனிஷக் கருத்துக்களையோ கொண்டு இயங்கவில்லை. கட்சித்தலைவர்களும் இப்புதுக்கருத்துக்கள் பற்றிப் பேசாதிருக்கின்றனர். முன்னேற்றம் பற்றிப் பேசநேரும்போது, காந்தி 'ராமராஜ்ஜியம்' பேசியது போலப்பேசுகிறார் 'வள்ளுவம் தமிழன் கண்டது; அதுவே தமிழகத்துக்கு ஏற்றது' என்கிறார். 'குறள் வழியே தமிழனுக்கு ஏற்றது' என்கிறார். 'வள்ளுவர்வழி நாம் தமிழர் வாழ்வோம்' என்கிறார். 'குறள் காட்டும் அரசியலே தமிழ் நாட்டுக்கு ஏற்றது' என்று கூறுகிறார்.

நம் தமிழர், கருத்துக்களில் வளர்ச்சி காணாது பழங்கருத்துக்களைக் கொண்டிருந்ததற்குக் காரணம் தமிழ் நூலாசிரியர்களும் அறிஞர்களும் வழக்கில் வைத்துக் கொண்டுள்ள 'கருத்து

வளர்ச்சிக் கோணல் முறை'யாகும். இது பற்றி யான், முன்னமே குறிப்பிட்டுள்ளபடி, எனது 'தமிழர்களின் தரித்திரம்' என்னும் தனித்த கட்டுரையில் விரிவான ஆராய்ச்சி செய்துள்ளேன். இங்கே அது பற்றிப் பேசாது விடுத்துப் பழங் கருத்துக்களைக் கொண்டிருத்தலால் விளைவதென்ன வென்பது பற்றிப் பேசுவோம்.

## கருத்துக்கள் செயல்களின் வித்துக்கள்

தமிழர் பழங்கருத்துக்களைக் கொண்டிருத்தலால் தீதில்லை என்று எண்ணவேண்டாம்; எண்ணிக்கொண்டிருந்தால் அதனை அகற்றிவிட வேண்டும். ஏனோ?

தமிழர் இன்று வாழும் காலம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி; இன்றிருக்கும் சமுதாய நிலைமைகள் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி நிலைமைகள். தமிழரிடையே இன்று இயற்கையாக, தானாகத் தோன்றும் எண்ணங்கள் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதிக் காலத்து எண்ணங்கள். ஆனால் தமிழர் கொண்டுள்ள கருத்துக்களோ புராதனமானவை; சுமார் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக் காலத்தவை. இடையிலே கடந்து சென்ற காலம் பல நூற்றாண்டுக் காலம். அவ்விடைக் காலத்தில் உலகம்,

சமுதாயம் வளர்ச்சியடைந்திருக்கின்றன. அதுவும் எத்தகைய வளர்ச்சி? பிரமிக்கத்தக்க வளர்ச்சி. உலக சமுதாயம் அவ்விடைக் காலத்தில் எத்தனை யோ மாற்றங்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இன்றைய சமுதாயம் அன்றைய சமுதாயத் திலிருந்து மாறுபட்டிருக்கின்றது.

எனவே இச்சமுதாயத்திலிருந்து பிறக்கும் தமிழர் எண்ணங்களுக்கும் அன்றைய சமுதாயத் திலிருந்து பிறந்த தமிழர் கருத்துக்களுக்கும் இடையே பெருத்த வேற்றுமையுண்டு. அதாவது தமிழர் எண்ணத்துக்கும் கருத்துக்கும் ஒற்றுமை யில்லை ஒரு மனிதன் எண்ணத்துக்கும் கருத்துக்கு மிடையே ஒற்றுமையில்லாமல் வேற்றுமையிடம் பெற்றால் எண்ணியதை அவன் செய்து முடிக்கக் கூடாதவனாக இருக்கிறான். அவன் எண்ணியதைச் செய்து முடிக்க அவன் கொண்டுள்ள கருத்து இடம் தருவதில்லை; அது வேறாக இருக்கும். எண்ணியதைச் செய்து முடிக்க மனப் பக்குவப் படாமலிருக்கும் இந்நிலையை 'மனப் பக்குவமற்ற நிலை' என்று சொல்லலாம். செயல்களை எழுப்புவதில் கருத்து அடைகின்ற இடம் எவ்வளவு முக்கியமானது! கருத்துக்களே செயல் களைத் தோற்றுவிக்கும் வித்துக்களாக உள்ளன.

## தமிழரின் செயலற்ற நிலை

தமிழர் மனப் பக்குவமற்ற நிலையிலிக்கிறார், பழங்கருத்துக்களைக் கொண்டிருக்கின்ற காரணத்தால். மனப் பக்குவமற்ற நிலையிலிருக்கும் தமிழர் செயலற்றிருக்கிறார். தமிழ் நாட்டுக்குச் சுற்றுப் பயணத்தின் போது வந்து சென்ற பல பிற நாட்டு அறிஞர்களும், "தமிழர் அறிவில் சிறந்தவர்களாக இருக்கிறார்கள்; அதே நேரத்தில் செயலற்றவர்களாக இருக்கிறார்கள்" என்று வருணித்துக் கூறினார்கள். அண்மை நாட்களில் சுற்றுப் பயணத்தின் போது வந்து சென்ற டாக்டர் ராம் மனோகர் லோஹியா (Dr. Ram Manoher Loghia) இதே கருத்தைத் தெரிவித்தார்.

அறிவில் சிறந்த தமிழர் ஏன் செயலற்ற நிலையில் இருத்தல் வேண்டும்? ஒரு மனிதன் பொருளற்றவனாக இருந்தால், அவன் சிறந்த அறிவுடையவனாகவே இருப்பினும், செயலற்ற நிலையில் இருப்பான். இந்தவுண்மை தனிமனிதனுக்கே பொருந்தும். ஒரு நாட்டு மக்கள் என்ற பெருங் கூட்டத்தார்க்குப் பொருந்தாது. ஒரு நாட்டு மக்கள் பொருள் சிறிதுமேயில்லாமல் இருக்கமாட்டாரல்லவா? பொருள் சிறிதேனும்

பெற்றிருப்பர். பொருள் குறைவாகப் பெற்றிருத்தற்காக ஒரு நாட்டு மக்கள் செயலற்றிருத்தல் வேண்டியதில்லை. பின் என்ன காரணம்?

தமிழர் கொண்டுள்ள புராதனக் கருத்துக்கள், இந்நவீன காலத்துச் செயல் செய்யத் தடையாக இருக்கின்றன. ஆகவே தமிழர் செயலற்று இருக்கின்றனர். இங்கே இதனை விளக்க வொரு எடுத்துக் காட்டினை மேற்கொள்ள விரும்புகிறேன். வாசகர்கள் என் விருப்பத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களில் இருவர், அவர்கள் பொருளாதார நிலையிலும் அறிவு நிலையிலும் ஏழைகள், கீழே கண்டபடி பேசுகின்றனர். அவர் பேச்சைச் சற்றே கேட்போம்.

முதல் மனிதன்– "ஓயாதபாடு, ஓயாதபாடு!, ஒழியாத வேலை, ஒழியாத வேலை! என்ன உலகம், என்ன வாழ்க்கை?"

இரண்டாம் மனிதன்– "என்னப்பா ஒரே வெறுப்பு உனக்கு! ஓட்டம் தானப்பா உலகம். ஓட்டமில்லை என்கிறபோது என்ன, வாழ்வே யில்லையே"

மு. மனிதன்- "நல்ல ஓட்டமப்பா, ஓய்வு ஒழிவு இல்லாத ஓட்டம்!... (சிறிது நேரம் இடை விட்டு யோசித்துப் பின்) ஓட்டம்தான் உலகம், சரி; எல்லாருமா இந்த ஓட்டம் ஓடுகிறார்கள்?"

இ. ம- "ஓடவேண்டுமப்பா; அதுதானப்பா உலக நியாயம்"

மு. ம- "எங்கப்பா ஓடுகிறார்கள் எல்லாரும்? நடுத் தெருவிலே மூன்றுமாடி வீடு கட்டுகிறானே, அவன் உன்னையும் என்னையும் போல ஓடுகிறானா?"

இ. ம- "இல்லை. அவனை (பணக்காரனை) உலக நியாயப்படி வாழ்கிறான் என்று சொல்லு கிறார்களா? இல்லையே!"

மு. ம- "ஏன் சொல்லாம லென்ன?"

இ. ம- "இன்றைக்கு ஆயிரத்திலொருவன் சொல் வான். அதுவா மேலோங்கப் போகிறது? முடியுமா? கண்டு எடுக்கிற பொருளானா லும் கண்டு எடுத்தால்தானப்பா கைக்குக் கிடைக்கும். குனிந்து எடுக்காத போது அந்தப் பொருள் ஏதப்பா? அதை எடுக் கிறதொரு வேலையில்லையா?"

மு. ம– "ஆமாம்"

இ. ம– "மண்ணைக் குழைத்து வைத்தால் தானப்பா மதிலாகும். மண்ணைக் குழைத்து வைக்காதபோது மதிலேது? மண்தானே! மண்ணுக்கு ஏது விலை? மதிலுக்கு விலையுண்டே, எதனால்? மனிதன் அதில் உழைத்ததனால். உழைப்புத் தானப்பா செல்வம்; உழைப்பது தானப்பா உலக நியாயம்"

மு. ம– "இந்த உலக நியாயப்படி நடக்காதவன் நன்றாக இருக்கிறானே, உலக நியாயப்படி நடக்கிற நாம் கெட்டழிந்துகிடக்கிறோமே, இதைத்தானே நான் சொல்லவந்தேன்."

இ. ம– "உழைக்காதவன் கைக்குச் செல்வம் எப்படிப் போனது என்று தானே இன்றைக்குக் கேட்கிறார்கள், விசாரணை செய்கிறார்கள். உழைக்கிறவன் கைக்குச் செல்வம் செல்லவேண்டும் என்று இன்றைக்குப் பேசுகிறார்கள். சீக்கிரத்தில் உலகத்தில் நியாயம் நிலை பெறுமப்பா. நியாயம் ஒருவனுக்கு என்று அவனே வைத்தது தானா?"

கேட்டது போதும்; இனி நாம் நம் வழியே போவோம்.

இந்த எண்ணங்கள் இந்த ஏழைகளிடம் எப்படிப் பிறக்கின்றன? உயர்வும் தாழ்வும்-ஏழையும் பணக்காரனும் வளர்ந்த நிலையில் காணப்படும் இவ்விருபதாம் நூற்றுண்டுச் சமுதாயத்திலிருந்து பிறக்கின்றன. ஆனால் இப்படிப் பேசிக்கொண்ட இருவரும், இவர் பேச்சிலிருந்து திட்டமான கருத்து எதையும் உருவாக்கிக் கொள்ளவில்லை அதற்கு அவர்க்குப் பல வசதிகள், நேரம், ஆராய்ச்சித் திறமை, கல்வி இவை இல்லை.

இவர்களிடம் இவர்கள் உள்ளத்தில் தானுகப் பிறக்கும் இவ்வெண்ணங்களை வலுப்படுத்தும் கருத்துக்கள் ஓதப்படாமல் புராதனக் கருத்துக்களோ, வள்ளுவர் கருத்துக்களோ ஓதப்படுகின்றன. "உலக நியாயப்படி வாழ்ந்தவனே இப்பிறப்பில் பல்லக்கில் ஏறிக்கொண்டு போக முடிகின்றது; உலக நியாயப்படி வாழாதவன் இப்பிறப்பில் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு தான் போக முடிகின்றது." இது வள்ளுவர் காலத்துப் பழங்கருத்து.

இக்கருத்து இவர்களிடம் இன்று தானுகப் பிறக்கும் எண்ணத்திற்கு நேர்மாருனது. இருப்பினும் ஆராய்ச்சித் திறமையும் பரந்த பலவகை

அறிவும் இல்லாமையால் இவர்கள் ஏற்றுக்கொள் கின்றனர். இயற்கையாகத் தானாகத் தம்மிடத்தே தோன்றும் எண்ணத்தை மடக்கி விடுகின்றனர். வள்ளுவர் கருத்துக்களே முடிவானவை, அவர் கருத்துக்கள் எக்காலத்துக்கும் பொருந்துவது என்று கல்வியறிவுடைய மனிதர்கள் கூறுவதே இவர்கள் வள்ளுவரின் ஒவ்வாத இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளக் காரணமாகும்.

இதை ஏற்றுக் கொள்வதால் என்ன ஏற் படுகின்றது? 'மனிதன் முற்பிறப்பில் செய்த வினையைச் சார்ந்து இப்பிறப்பில் நல்வாழ் வும் கெட்ட வாழ்வும் பெற்று வாழ்கிறான்' என் னும் இப்புராதனக் கருத்தை ஏற்றுக் கொள்வ தால், 'மனித வாழ்வின் ஏற்றத் தாழ்வுக்குக் காரணம் இங்கேயில்லை' என்று கருதுகிறார்கள். மனித வாழ்வின் ஏற்றத் தாழ்வுக்குக் காரணம் அவனவன் முற்பிறப்பில் செய்தவினை என்றும் கருதுகிறார்கள். மனித வாழ்வின் ஏற்றத்தாழ் வுக்குக் காரணம் இங்கே இல்லை என்று கருதுவ தால் மனிதனால் அந்தக் காரணம் நிவர்த்திக்க முடியாதது என்றும் முடிபுகட்டிவிடுகிறார்கள்.

எனவே, இவர்கள் ஏழை, பணக்காரன் என்னும் ஏற்றத்தாழ்வை அகற்றும் முயற்சியை

வெறும் கற்பனை யென்றும், அது மனிதனால் கூடாதது என்றும் எண்ணிப் பேசி விடுகிறார்கள். இவ்வேற்றத்தாழ்வை யகற்றப் பாடு படுகின்றவரை 'கலகக்காரன்' என்று இழிவாகப் பேசவும் தயங்குகின்றாரில்லை. இனி எப்படி இவர்கள் ஏழை, பணக்காரன் என்னும் ஏற்றத்தாழ்வைச் சீர் படுத்துதற்காகச் சமுதாயத்தினை மாற்றியமைக்கும் வேலையைச் செய்ய முன் வருவார்கள்? மாட்டார்.

இந்த எடுத்துக் காட்டிலிருந்து தமிழர் கொண்டுள்ள புராதனக் கருத்துக்களே அவர்களை இந்நவீன காலத்துச் செயல் செய்யவொட்டாமல் தடுக்கின்றன என்பது விளங்கும். நவீன காலத்துச் செயல் செய்யக் கூடாத இந்நிலையில் தமிழர் இருப்பதையே, 'தமிழர் செயலற்ற நிலையில் இருக்கின்றனர்' என்று கூறுகிறார்கள்.

## காலத்தையநுசரித்தலும் முன்னேற்றமும்

இந்த எடுத்துக் காட்டிலிருந்து பொதுவாக மக்கள் கொள்ளும் கருத்துக்களுக்கும் அவர்கள் செயலுக்குமுள்ள பொருத்தம் புலனாகும். காலத்தின் கருத்துக்களைக் கொள்ளாதபோது காலத்தின் செயல்களைச் செய்ய முடிகிறதில்லை; அதாவது காலத்துடன் இணையாக நடக்க முடிகிறதில்லை.

காலத்துச் செயல்களைச் செய்வதுதானே காலத்துடன் இணையாக நடப்பது? காலத்துடன் இணையாக நடப்பதுவே முன்னேற்றம். காலத்துடன் இணையாக நடக்க முடியாத நிலையைப் 'பின் தங்குதல்' என்று குறிப்பிடுகிறோம். காலத்தின் வேகத்தை மிஞ்சி மனிதன் செயலாற்ற ஒரு போதும் கூடுவதில்லை; எனவே தான், காலத்துடன் இணையாக நடப்பதுவே முன்னேற்றம் என்றாகிவிடுகின்றது. எனவே, காலத்துக் கருத்துக்களைக் கொள்ளாதபோது முன்னேற்றம் காண முடிகிறதில்லை: அதாவது, காலத்துக்கருத்துக்களைக் கொள்ளுதலும் முன்னேற்றம் காணுதலும் செயலில் ஒன்றாகவே இருக்கின்றன.

## தமிழர் விழிப்புறல் வேண்டும்

தமிழர் காலத்துக் கருத்துக்களைக் கொள்ளாத காரணத்தால் அவர் முன்னேற்றம் சரிந்த நிலையில் கிடக்கின்றது. நம் தமிழர் விரைவிலே இன்று அவர் கொண்டுள்ள பழங்கருத்துக்கள் (திருக்குறள் கருத்துக்களையும்) ஒவ்வாதவை எனக் கண்டு அவற்றைத் தள்ளி, புதுக்கருத்துக்களை—காலத்துக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அல்லாமல், இன்னும் ஐந்தாண்டுகளுக்கு; விஞ்ஞான வளர்ச்சியால் ஒளி பாயும்

வேகத்தில் வளர்ந்து செல்லும் இவ்விருபதாம் நூற்றுண்டுக் காலத்தில் பழங்கருத்துக்களைக் கொண்டிருப்பாராஞல், இந்த ஐந்தாண்டு குறுகிய காலமேயாயினும், இவ்வைந்தாண்டுகளில் உலகம் அடையும் வளர்ச்சியை எட்டிப் பிடிக்கத் தமிழருக்கு இருநூற்றுண்டுகள் தேவைப்படும்.

தமிழரைப் படு பாதாளத்தில் தள்ளும் இப் பிற்போக்குச் சக்தியின் வன்மையான தாக்குதலுக்கு ஆளாகாமல் தமிழர் விரைவிலே விழிப்படைதல்வேண்டும். நமது போக்கை நாமே தீர்மானிக்கும் பிறப்புரிமையைப் பெற்றுள்ள நம் தமிழருக்கு, விழிப்புற இதுவே சரியான காலம். இனியும் காலம் தாழ்த்துதல், வருகின்ற பேராபத்தைப் பார்த்துத் தப்பிப் பிழைக்க வழி தேடாமல் கண்ணைமட்டும் மூடிக் கொள்ளுதல் எவ்வளவு பயித்தியக்காரத் தன்மை நிறைந்ததோ, அவ்வளவு பயித்தியக்காரத் தன்மை நிறைந்த செயலாகும்.

• •

# தமிழர்களும் அவர்கள் கொள்கைகளும் செயல்களும்

முன் பகுதியில் 'தமிழர்களும் அவர்கள் எண்ணங்களும் கருத்துக்களும்' என்னும் தலைப்பில் எழுதிய யான். இப்பகுதியில் 'தமிழர்களும் அவர்கள் கொள்கைகளும் செயல்களும்' என்னும் தலைப்பில் எழுதுகிறேன். காரணம் மிதுவே; கருத்து செயலைத் தோற்றுவிக்கின்றது, செயல் செய்யக் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. கொள்கை என்பது நோக்கமும் நடத்தை முறையும் சேர்ந்ததன் கூட்டாகும். கொள்கை = நோக்கம் + நடத்தை முறை.

காலத்துக் கருத்துக்களைக் கொள்ளாத காரணத்தால் தமிழர் காலத்துச் செயல் செய்யக் கூடாத செயலற்ற நிலையில் இருக்கின்றனர் என்று முன் பகுதியில் காட்டினேன் காலத்துச் செயல் செய்யக்கூடாத நிலையில் தான் தமிழர் இருக்கின்றனரேயல்லாமல் வேறு எத்தகைய செயலும் செய்யக்கூடாத நிலையில் இல்லை. எனவே ஏதேதோ செயல் செய்கிறார். அவை எவை?

## தமிழரிடையே புராதன இயக்கம்

புலவரும், பண்டிதரும், ஏனைய மொழி வல்லாரும் தமிழ் என்று கூறிச்சமயம் வளர்த்தது வீண்போகவில்லை; தமிழர் உள்ளத்தில் சமய உணர்ச்சி பெருக்கெடுத் தோடுகின்றது. தமிழ் நூலாசிரியர்களும் அறிஞர்களும் தமிழ்மொழியில் கருத்தை வளர்க்கக் கையாண்ட ஒரு 'கோணல் முறை' அதற்கேற்ற பலனைத் தராமல் இல்லை; அம்முறை பழங்கருத்துக்களையே தமிழருக்கு ஊட்டிவருகின்றது. தமிழர் உள்ளத்தில் ஊறிப் போன சமய உணர்ச்சி, அவர் கொண்டுள்ள பழங்கருத்துக்கள், இவையிரண்டும் இன்று தமிழரிடையே புராதன இயக்கம் புத்துயிர் பெற்றெழக் காரணமாயின.

புராதனக் கருத்துக்களும் சமய உணர்ச்சியும் கொண்ட தமிழர் நவீன காலத்துச் செயல் செய்யமாட்டாத நிலையில் ஆங்காங்கே புழுங்கிக் கிடந்தார்கள். அவர்களைக் கட்டி வளர்க்கும் நோக்கம் கொண்ட ஒரு புராதன இயக்கம், மதச் சார்புள்ள இயக்கம் இன்று தமிழகத்தில் வெடித்துள்ளது. இம்மதவியக்கம் 'தமிழும் சைவமும்' என்னும் கொள்கை கொண்டுள்ள தமிழர் பலருக்கும் உடன்பாடானது; அவரும்

இணைந்து கொண்டார். ஆதீன கர்த்தாக்களும், மடாதிபதிகளும் இப்பத்தாம் பசலி இயக்கத்தை 'அருள் நெறி இயக்கம்' என்று கூறிப் போற்றிக் காத்து வளர்க்கின்றனர்.

## இவ்வியக்கம் நஞ்சினும் கொடியது

இப்புராதன இயக்கத்தின் நோக்கமும் செயலும் 'கோயில் திருப்பணி செய்தல்' என்ற ளவே என்று தமிழர் அலட்சியமாக இருத்தல் கூடாது. இவர் நோக்கம் என்ன, என்ன பேசுகிறார், ஏது செய்கிறார் என்பவற்றை ஆராய்தல் வேண்டும்.

இவர் எந்நேரமும் எவ்விடத்தும் பேசித் திரிகிறார்கள். மக்களுக்குப் போதிக்கிறார்கள். இவர் போதனைக்குப் பெயர் 'அறவுரை' களாம்! 'அறவுரை' என்னும் சொல்லை மக்களை மயக்கப் பயன் படுத்துகிறார் இவர். எப்படி? 'உழைப்பை உலகத்துக்கு விட்டுவிட்டுச் சிந்தனையைப் பகவானிடம் செலுத்து என்று அறவுரை கூறுகிறார் மக்களுக்கு. மக்களும் சாதுக்கள் தரும் 'அற வுரை' ஆயிற்றே என்றெண்ணிக்கேட்டு வருகின்ற னர், சிந்தனை மறந்து.

'உழைப்பை உலகத்துக்கு விட்டு விட்டுச் சிந்தனையைப் பகவானிடம் செலுத்து' என்ற

போதனையில் எவ்வளவு நஞ்சு கலந்திருக்கின்றது, பாருங்கள். உழைப்பை உலகத்துக்குக் கொடுக்கின்ற உழைப்பாளி ஏன் அது பற்றிச் சிந்திக்கக் கூடாது? உழைத்த உழைப்பு உலகிலுள்ள எவனுக்குக்கிடைக்கின்றது என்று சிந்திக்கக் கூடாதா, ஏன்? உழைக்காத உலுத்தர் கூட்டம் உழைப்பவர் உழைப்பைப் பெற்று உயிர் வாழ்கின்றது. உழைக்காமல் உழைப்பைப் பெற்று உயிர் வாழ்தல் அயோக்கியத்தனம். இந்த அயோக்கியத்தனத்தை உழைப்போர் அறியாமலே இருப்பாராஞல் உழைக்காத உலுத்தர்கள் கவலையற்று, நிர்ப்பயமின்றி இருக்கலாமல்லவா? உழைப்போர் இந்த அயோக்கியத்தனத்தை அறியக்கூடாதபடி தடுக்கவே 'உழைப்பை உலகத்துக்கு விட்டுவிட்டு அது பற்றிச்சிந்திக்காமல் சிந்தனையைப் பகவானிடம் செலுத்து' என்று போதிக்கிறுர், உழைப்பாளரிடம்.

இவர் போதனைகள் மக்களுக்குப் போதையை ஊட்டுகின்றன; மதிமயங்கச் செய்கின்றன. அருமைத் தமிழ் அப்பாவி மக்களைச் சுய சிந்தனை, தன்னம்பிக்கை (மனித சக்தியில் நம்பிக்கை) என்னும் மனித வாழ்க்கைக்குத் தேவையான இருபெரும் ஆற்றலிலிருந்து தளர்த்தித் தூர

இழுத்துச் செல்கின்றன, இவர் போதனைகள். சுய சிந்தனை, தன்னம்பிக்கை (மனித சக்தியில் நம்பிக்கை) இவற்றை இழந்துவிட்ட பின் மனித தன் ஆறறிவு படைத்த மனிதனாக இருக்க மாட்டான்; பல அறிவுகள் குறைந்த புழுபூச்சி இனத்தைப் போலவே இருப்பான். அருமைத் தமிழ் அப்பாவி மக்கள் புழு, பூச்சிபோல் பல அறிவுகள் குறைந்த மக்களாகத் தமிழ் நாட்டில், சாக்கடையில் உழல்வதுபோல, உழன்று திரிய வேண்டுமா? என்ன அநியாயம்! என்ன கொடுமை! இந்தக் கொடுமைக்குத் தமிழகத்தில் இடம் இருத்தல் கூடாது.

யான் இந்நூலை எழுதுங்காலை இவ்விடத்தில் அடைந்த பரபரப்பும் ஆத்திரமும் வேறு எவ்விடத்தும் கொள்ளவில்லை. என்னைப் பரபரப்பு அடையச் செய்யுமளவுக்கு இவ்வியக்கத்தின் பிரச்சாரம் மக்களை மக்கள் என்னும் நிலையிலிருந்து தாழ்த்துகின்றது; தமிழர் போக்கைப் பாதிக்கின்றது.

பல நூற்றாண்டுகளாகவே புராதனக் கருத்துக்களும் சமய உணர்ச்சியும் கொண்டுள்ள தமிழரிடையே முன்னெல்லாம் இப்புராதன இயக்கம் தோன்றாமல் இன்று திடீரெனத் தோன்றக்

காரணம் வேண்டுமே? உண்மைதான். பல நாட்களாகவே ஒருவன் பலமற்றிருந்தாலும் திடீரென அவன் படுக்கையில் விழக் காரணம் ஒன்று தனியாகவே இருக்கின்றது. அதேபோல இப்புராதன இயக்கம் இன்று திடீரெனத் தோன்ற ஒரு காரணம் தனியாக இருத்தல் வேண்டும். அதுவென்ன என்பதை இனிக் கூறுவேன்.

'தமிழர் கொள்கையும் செயலும்' என்னும் தலைப்பின் கீழ் தமிழர் கூட்டமாகக் கட்டுப்பாட்டுடன் இருந்து வகுக்கும் கொள்கை, செய்யும் செயல்பற்றியே நாம் பேசமுடியும். தமிழர் கூட்டமாகக் கட்டுப்பாட்டுடனிருந்து கொள்கை வகுத்துச் செயல்படும் இயக்கங்கள் இரண்டு. அவற்றில் ஒன்று பற்றி, 'அருள் நெறிக் கூட்டம்' என்னும் புராதன இயக்கம் பற்றிப் பேசிவிட்டோம். இனித் தமிழர் கூட்டமாகக் கட்டுப்பாட்டுடனிருந்து கொள்கை வகுத்துச் செயல்படும் அரசியல் கட்சிகள் பற்றியே விரிவாகப் பேச வேண்டும்.

## தமிழர் அரசியல்கட்சிகளின் நோக்கம்

கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவற்றைக் கெடாது காத்தல் வேண்டும் என்னும் எண்ணம் அண்மை நாட்களில் தமிழரிடையே வலுத்தது

என்பதை முன்பகுதியில் கண்டோம். அதே பகுதியில் அவ்வெண்ணத்திலிருந்தே தமிழர் அரசியல் கட்சிகள் பிறந்தன என்பதும் கண்டோம். கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் கெடாது காத்தல் வேண்டும் என்னும் எண்ணத்தைக் கொண்டு கட்டப்பட்ட தமிழர் அரசியல் கட்சிகளின் நோக்கம் தமிழர் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவை கெடாது காத்தலே என்பது இங்கே தெளிவாகின்றது.

## தமிழர் அரசியல் கட்சிகள் பூரணத் தன்மையற்றவை

கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவற்றைக் கெடாது காத்தல் வேண்டும் என்னும் ஒரே எண்ணம் மட்டும் நம் சமுதாயத்தாரிடையே இன்று நிலைபெற்றிருக்கவில்லை. ஏழை, பணக்காரன் என்னும் ஏற்றத்தாழ்வு வளர்ந்த நிலையில் மிகப் பிதுக்கமாகத் தோன்றும் இன்று இந்த ஏற்றத்தாழ்வைச் சீர்படுத்தவேண்டும் என்னும் எண்ணமும் நம் தமிழர் சமுதாயத்தாரிடையே தானாகத் தழைத்து நிலை பெற்றிருக்கின்றது. ஆனால் தமிழர் அரசியல் கட்சிகளோ முன் கூறப்பட்ட ஒரே எண்ணத்தை நிறைவேற்றும் நோக்கம் கொண்டே கட்டப்பட்டுள்ளன. இரண்டாவது கூறப்

பட்ட எண்ணத்தை, இவ்வெண்ணம் சமுதாயத்தாரிடையே நிலைபெற்றிருந்தபோதும், நிறைவேற்றும் நோக்கம் கொள்ளாமையால் தமிழர் அரசியல் கட்சிகள் பூரணத்தன்மை பெற்றிருக்கவில்லை.

## அரசியல் கட்சிகள் எப்படி இருத்தல்வேண்டும்?

அரசியல்கட்சி ஒருபோதும் கலாச்சாரம்,பண்பாடு, நாகரிகம் இவை காக்க எனவே ·கட்டுப்படுதல் கூடாது. அவ்வாறு கட்டப்பட்டால் அதன் நோக்கமும் அதுவே - கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம், காத்தலே ஆகும். அக்கட்சியின் நோக்கம் முன்னேற்றம் காண்பதாகாது. எனவே அக்கட்சி முன்னேற்றம் காணப்பயன்படாது. அப்போது அது விரைவில் அழிவுறும், எப்படி?

கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவற்றை காத்தல் வேண்டும் (காத்தல் வேண்டும் என்றால் எவ்வகையிலும் மாற்றமடையாது காத்தல் என்பதே பொருள்; அதே பொருளில்தான் அவ்வார்த்தையைப் பயன் கொள்கிறார், அவர்) என்று கூறுகின்றவர் எந்த ரூபத்திலும் மாற்றத்தை-முற்போக்கு மாற்றத்தையும் பிற்போக்கு மாற்றத்தையும்-விரும்பாத பழைமைப் பித்தர்கள் கலாச்சாரம், பண்பாடு இவையிரண்டும் அடிப்படை

வாழ்க்கை முறைகள். வாழ்க்கை முறையில் எவ்வித மாற்றத்தையும் விரும்பாத பழைமைப் பித்தர்களே அக்கட்சியின் மையம்.

எனவே மாற்றம் நாடாத பழைமைப் பித்தர்கள் கண்ட கட்சி முன்னேற்றம் பற்றிப் பேசாது. காரணம் முன்னேற்றம் காண மாற்றம் இன்றியமையாததாக இருக்கின்றது. பேசினுலோ ஒவ்வாத பழைமையை ஏதோவொரு வகையால் காப்பதாகவே இருக்கும்; அதாவது 'இராமராஜ்ஜியம்' பேசுவதாகத் தானிருக்கும், அம்முன்னேற்றப் பேச்சு. முன்னேற்றம் பற்றிக் கவலை கொள்ளாதபோது அக்கட்சி காலத்திற் கொவ்வாமல் போகும்; எனவே அது அழிவுறும்.

காலப்போக்கில் கட்சியின் நோக்கம் முன்னேற்றம் காணுதல் என ஆக்கிக் கொண்டு நிலைபெறுதல் கூடாதோ? கூடும். ஆனல் அது மிக்க கடினமான வேலை. நோக்கத்தை மாற்றும் போது அக்கட்சி எவரிடம் செல்வாக்குப் பெற்றிருந்ததோ அவர் செல்வாக்கை இழக்க நேரிடலாம். அப்போது அது அழிந்து படலாம். எனவேதான் அரசியல் கட்சி கட்டப்படும் போதே நாட்டின் முன்னேற்றம் காணும் நோக்கம் கொண்டு கட்டுப்படுதல் வேண்டும்; கலாச்சாரம், பண்பாடு,

நாகரிகம் காக்க என நோக்கம் கொண்டு கட்டப் படுதல் கூடாது.

## தமிழர் அரசியல் கட்சிகளின் கொள்கைகள்

தமிழர் அரசியல் கட்சிகள் நிறைந்த தன்மை யற்றவை. ஏதோவொரு நோக்கம் கொண்டவை. எனவே அவை அவ்வொரு நோக்கத்தை நிறை வேற்றுதற்கேற்பக் கொள்கைகளை வகுத்துக் கொள்ளல் வேண்டும். அப்படி அவைகள் வகுத் துக் கொண்டிருக்கின்றனவா?

## தமிழர் அரசியல் கட்சிகளின் கொள்கையற்ற செயல்கள்

நோக்கத்தை நிறைவேற்றச் சரியான நடத் தை முறை (கொள்கை) காணமாட்டாமல் இக் கட்சிகள் திண்டாடுகின்றன வென்றே கூறலாம். திராவிடர் கழகங்களின் நோக்கம் தனியரசு காண்பது. எனவே திராவிட நாட்டு மக்களைக் கட்சியில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளும் போதே திராவிட நாட்டுப் பிரிவினை கைகூடும் என் பதை உணர்ந்த இக்கட்சிகள், மக்களைத் தம் வயப்படுத்த முயல்கின்றன.

முதலாவதாக, வடவர்மீது தம் வெறுப்பைக் காட்ட விரும்புகின்றன. அதற்கு ஆங்காங்கே தொங்கும் பெயர்ப்பலகைகளில் பொறிக்கப் பட்டிருக்கும் வடநாட்டுப் பெயர்களை மாற்றப் பெரும் பெரும் போராட்டங்கள் நடத்துகின்றன. இச்செய்கை கட்சியின் நோக்கத்திற்குப் பொருந் தியதாக இருந்தபோதிலும், கட்சிக் கொள்கைக் கேற்றதாகவே இருந்தபோதிலும் மக்களால் அறிந்து கொள்ளப் படுகின்றதில்லை. மக்கள் இதைக் கொள்கையற்ற செயலென்றே வருணித் துக் கூறுகின்றார்கள்.

## மக்கள் அறிவுடையோரே

மக்கள் அறியாமல் தவறாகக் கருதுகின்றாரா? இல்லை மக்கள் தாமாக ஆராய்ச்சி செய்யும் திற மையும் பேரறிவும் படைத்தவர்களல்லர்; ஆனால் மக்கள் ஒரு காலத்திலும் சிவர், சில கூட்டத்தார் கருதுவது போல முட்டாள்களுமல்லர்.

இவ்வுலகத்தின் இயக்கங்களையும் நடவடிக் கைகளையும் பலர் பலவேறு வகைகளில் வியாக்கி யானம் செய்வதையும் விமர்சனம் செய்வதையும் மக்கள் விளங்கிக் கொள்ளும் அறிவைப் பெற்றி ருக்கிறார். அந்த அறிவைக் கொண்டு எந்தச்

செயல், எந்த நடவடிக்கை சரியானது, நேர்மையானது என்று அவர்கள் திட்டமாகக் காலப் போக்கில், உடனுக்குடனே முடிபு செய்வது அவர்களால் இயலாது போயினும், முடிபு செய்துவிடுகிறார்கள். இதே வகையில் தான் உலகம் மெதுவாக முன்னேறிச் செல்கின்றது.

அத்தகைய அறிவுபடைத்த மக்கள் தாம் இக்கட்சிகளின் செயல்களைக் கொள்கையற்ற செயல்கள் என்று வருணித்துக் கூறுகின்றார்கள். அவர்கள் கூற்று எப்படிப் பொருந்துமென்று பார்ப்போம்.

## உலகியல் வாழ்வின் வழியே அமைந்தது

மனித வாழ்க்கை யதன் உயர்ந்தஇலட்சியத்தை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றது. அந்தப் பிரயாணத்தை ஆற்றொழுக்கிற்கு ஒப்பிடலாம்.ஆறுதோன்றிய இடத்திலிருந்து பிரயாணம் செய்து கொண்டே இருக்கின்றது. இந்தப் பிரயாணம் ஒரே சீரான வேகத்தில் நடைபெறுகின்றது. தோன்றிய இடத்திலிருந்து சங்கமமாகும் கடலையடைவதற்காக அது ஒரே பாய்ச்சலாகப் பாய்கிறதில்லை. குறுகுறு ஓட்டமாகவே ஓடிக்கொண்டிருக்கின்றது. அவ்வாறு ஓடும்போது எப்போதும் பள்ளத்தை நோக்கியே ஓடுகின்றது.

ஒருபோதும் அது திரும்பி மேட்டுக்குச் செல்வதில்லை. முடிவாக முடிவான இலட்சியமாகிய கடலை யடைந்து விடுகின்றது; கடலையடையாமல் அது வேறெங்கும் போகிறதே இல்லை.

ஆற்றொழுக்கைப் போலவே மனித வாழ்க்கை பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றது. அந்தப் பிரயாணம் தான் வாழ்வில் ஏற்படும் மாற்றம். இப்பிரயாணம் (மாற்றம்) ஒரே சீரான வேகத்தில் நடைபெறுகின்றது. கீழான வாழ்க்கை நிலையிலிருந்து மனித வாழ்வின் உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்காக ஒரே புரட்சி நடைபெறுகிறதில்லை; சிறு சிறு மாற்றங்களே நடைபெறுகின்றன. அத்தகைய மாற்றங்களும் அவ்வக்கால வாழ்வின் நலனுக்காகவே இடம் பெறுகின்றன.

வாழ்வின் முடிவான உயர்ந்த இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காக அந்தக் காலத்து (நிகழ் காலத்து) வாழ்வை அழித்துக் கொள்ளும் புரட்சியையோ அல்லது அந்தக் காலத்து (நிகழ் காலத்து) வாழ்வுக்கு நலன் தராத புரட்சியையோ மனித வாழ்க்கை யொருபோதும் ஏற்படுத்திக் கொள்ளுகிறதில்லை. வாழ்வுக்கு நலன் தரும் மாற்றங்களையே எக்காலத்தும் வாழ்வு

அடைகின்றது; வாழ்வுக்கு அவ்வப்போது நலன் தரும் மாற்றங்களே, வாழ்வின் உன்னத இலட்சியத்தையடைய மனிதன் எடுத்துவைக்கும் எட்டுக்களாக அமைகின்றன.

எனவே வாழ்வுக்கு நலன் தராதவொரு செயலைமக்கள் விரும்பமாட்டார்; அச்செயலைச்செய்கின்றவரையும் உயர்ந்த நிலையில் வைத்தெண்ண மாட்டார். மக்கள் வாழ்வுக்கு நலன் தராத செயலைச் செய்கின்றவர் அல்லது மக்கள் வாழ்வுக்கு நாசம்தரும் செயலைச்செய்கின்றவர் மனித இனத்தைக் காப்பவர் என்று கருதப்படமாட்டார்; அவ்வாறு கருதப்பட எவ்வித நியாயமுமில்லை. அவர் தன்னை 'மனித இனத்தைக் காப்பவன்' என்று கூறிக் கொள்வாரேயானால் அதுவே பித்தலாட்டம். வாழ்வுக்கு நலன் தராச் செயல் புரிகின்றோர் மக்கள் செல்வாக்கைப் பெறுதல் இயலாத காரியம். மக்கள், முன் சொன்னபடி, முட்டாள்களல்லர். உலகத்தில் நடைபெறும் இயக்கங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் சரியான அர்த்தம் காணும் ஒரு அறிவைப் பெற்றிருக்கின்றார்கள்.

இவ்வகையால் இக்கட்சிகளின் செயல் வேறு ஒரு கொள்கை கொண்டதாக இருப்பினும் அது

வாழ்வுக்கு நலன் தரும் கொள்கை கொள்ளாமை யால் கொள்கையற்ற செயலாகின்றது. இங்கே, கட்சியைக் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவை காக்க எனவே நோக்கம் கொண்டு கட்டி வளர்த்தால் அது எவ்வாறு முன்னேற்றம் காண பயன் படாது என்பதும், எவ்வாறு மக்கள் செல்வாக்கையிழக்கும் என்பதும், எவ்வாறு காலப் போக்கில் அழிவுறும் என்பதும் தெளி வாகக் காணுங்கள்.

## அரசியல் கட்சிகள் மதச் சீர்திருத்தம் பேசுகின்றன

கொள்கையற்ற செயல்கள் செய்வதால் மக் கள் செல்வாக்கை இழந்து அழிவுறும் நிலையை அடையும் இக்கட்சிகள், வேறு செயலால் நிலை பெற முயல்கின்றன. வேறு செயல்கள் எத்தகை யன? முன்னேற்றம் காணுவது இக்கட்சிகளின் நோக்கம் என்றில்லாமையால் பலன் தரும் செ யல் எதுவும் செய்யமாட்டாமல் சீர்திருத்தம் பேசுகின்றன. (அரசியல் கட்சிகள் சீர்திருத்தம் பேசுதல் கூடாது என்று கூறுகின்றவனல்லன், யான்; அறிய வேண்டும்) அதுவும் எத்தகைய சீர்திருத்தம்? மதச் சீர்திருத்தம்!

புராண இதிகாச நூல்கள் பேசும் கடவுள் களையும் கடவுள் கொள்கைகளையும் எடுத்து

அலசுகின்றன; கண்டிக்கின்றன. இதையே முக்கிய வேலையாகக் கொண்டுள்ளன இக்கட்சிகள். அதே நேரத்தில் புராண இதிகாச காலத்து அற நூல்கள் பேசும் புராதனக் கருத்துக்களை வலியுறுத்திப் பேசுகின்றன. மதச் சீர்திருத்தமாகக் கிருஷ்ணன் பொம்மைகள் உடைக்கப்படுகின்றன; பிள்ளையார் பொம்மைகள் உடைக்கப்படுகின்றன. பரமசிவனும், பார்வதியும் (கடவுள்கள்) சந்திக்கு இழுத்துப் பேசப்படுகின்றார்கள்! இராமாயண, மகாபாரத நாடகங்கள் இன்று நடிக்கப்படுகின்றன. சுருங்கக் கூறினால், புராதன காலத்துப் புராணம் இதிகாசம் கூறும் பொருந்தாத வரலாறுகள் பற்றிப் பேசுவதில் அதிக நேரத்தை இக்கட்சிகள் விரயமாக்குகின்றன.

## இம்மதச் சீர்திருத்தத்தினின்றும் வெடித்ததே புராதன இயக்கம்

இவையெல்லாம் சிறு பிள்ளைகள் விளையாடுவது போலத் தமிழ் நாட்டில் நடைபெறுகின்றன. இவற்றால் விளைவதென்ன வென்பது ஆராய்ந்து பார்க்கப்படுவதில்லை என்று தான் எண்ண வேண்டியிருக்கின்றது.

புராதன காலத்துப் புராணம், இதிகாசம் கூறும் வரலாறுகள் இன்று ஒரு முறை புதுமெருகு

கொடுக்கப்படுகின்றன. இக்கட்சிகள் பேசிவந்த; பேசிவரும் சீர்திருத்தம் புராதனக் கருத்துக் கொண்டு செயலற்று மூலையில் புழுங்கிக் கிடந்த மக்களுக்குப் புத்துணர்வை ஊட்டியது; ஊட்டு கின்றது. புராதனக் கருத்துக்காரர்கள் ஆங்காங்கே மூலையில் கிடந்தோர் ஒன்று திரண்டு ஐக்கிய பட்டுவிட்டார்கள். இன்று புராதன இயக்கங்களை வெளிப்படையாக இவ்விருபதாம் நூற்றுண்டில் கட்டி வளர்க்கின்றனர். தமிழகத்தில் பத்தாம் பசலி இயக்கங்கள் மதக் கூட்டங்கள் பெருகி வளர்கின்றன.

உலக நியதிப்படி வாழ்க்கை நடத்தாது எப்படியோ காலம் கழிக்கும் சாதுக்கள் புல்லுருவி போல வளருகின்றனர். இன்று தமிழ் நாட்டில் அறியாமை நிறைந்து கிடக்கும் கிராமங்களில், அப்பாவிக் கிராம மக்களால் மனித சமுதாயத்துக்கு ஒரு வகையிலும் தேவைப்படாதசாதுக்கள் மன்னர் மரியாதையில் வரவேற்கப் படுகின்றார்கள்! இது வெட்கக்கேடானசெய்தி; வேதனைதரும் செய்தியும் கூட.

## தமிழர் அரசியல் கட்சிகளுக்கு நேரான வழி

தமிழர் அரசியல் கட்சிகள் தமிழனின் தனித்தன்மை (தமிழன் கலாச்சாரம், பண்பாடு, நாக

ரிகம்) நிலை நாட்டல் வேண்டும் என்னும் நோக்கத்தை மாற்றிக்கொள்ளல் வேண்டும், முதல் வேலையாக. அடுத்துத் தமிழ் நாட்டின் முன்னேற்றம் காண்பதே நோக்கம் என ஆக்கிக் கொள்ளல் வேண்டும். பின் வாழ்வுக்குப் பலன் தராத செயல்களில் நாட்டம் செல்லாது; வாழ்வுக்குப் பலன் தரும் செயல்களில் மட்டுமே நாட்டம் செல்லும். அதற்கேற்ற நேரிய கொள்கைகள் வகுப்பதும் பின் இலகுவாகும்

நோக்கத்தை மாற்றிக்கொண்டவுடன் கண்ணை மூடிக்கொண்டு புராதனத் தமிழ் நூல்கள் தரும் ஒவ்வாத பழங்கருத்துக்களைப் பரப்புதலை விட்டொழித்தல் வேண்டும்; அதற்கு மாருக அந்நூல்களில் காணக் கிடக்கும் பொருந்தாக் கருத்துக்களை எடுத்துக்காட்டல் வேண்டும். புதுக் கருத்துக்களை சீர் தூக்கிப் பார்த்து ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு செய்தல் நாட்டின் முன்னேற்றம் காண வழி வகுக்கும்.

எல்லாரும் இன்புற்றிருக்க வழியுண்டா? உண்டானுல் அடையும் முறைகள் எவை? அவற்றில் எம்முறை தமிழ் நாட்டுக்கு எக்காரணத்தால் ஏற்றது? அதனை நடைமுறைப் படுத்துவது எப்படி? தமிழரிடம் மலிந்து கிடக்கும் வேற்றுமைகள்

ஏற்றத்தாழ்வுகள் என்னென்ன? அவற்றையகற்ற வழியுண்டா? அவற்றில் எது சிறந்தது? அதனை எப்படி நடைமுறைப் படுத்தலாம்? தமிழ்மக்களில் சிலர் தள்ளி வைக்கப்பட்டவர் போல் நடந்து கொள்கிறார்களே, அவர் நடத்தைகளுக்குக் காரணம் என்ன? அக்காரணம் நிவர்த்திக்க முடியாததா? எதிர் காலத்தில் தமிழ் மக்களிடம் இத்தகைய நிலை இடம் பெறாமல் தடுக்கமுடியுமா? அதற்குச் செய்யவேண்டுவதென்ன? எதிர்காலச் சந்ததியார்கள் இந்நிலையடையாதிருக்கக் குழந்தைகளை எப்படி வளர்க்கவேண்டும்? கல்வி எப்படி போதிக்கப்படவேண்டும்? இப்படிப் பலன் தரும் வகையில் சிந்தித்துச் செயல் படவேண்டும் இக் கட்சிகள். இதுவே இக்கட்சிகளுக்கு நேரானவழி.

## இஃது இக்கட்சிகளின் நேர்வழி

இக்கட்சிகள் தமிழரின் தனித் தன்மை (ஆசாரம், பண்பாடு, நாகரிகம்) காக்க வேண்டும் என்னும் நோக்கம் கொண்டிருப்பதும், ஒவ்வாத பழங்கருத்துக்களைப் பரப்புவதும், அர்த்தமற்ற மதச் சீர்திருத்தம் செய்வதும், பலனற்ற கொள்கையில்லாத செயல்கள் செய்வதும், எந்த ரூபத்திலும் தமிழ் நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் மாற்றத்தை விரும்பாது இருக்கின்ற

அவகேடான நிலைமைகளைக் காத்துவருவதும் தவ ருன பாதையாகும். இவ்வாறு இக்கட்சிகள் செய்வதால் தமிழ் நாட்டைக் காலத்துடன் இணைந்து செல்ல வைத்தல் முடியாது; முன்னேற் றம் காணுதல் முடியாது. எனவே இக்கட்சிகள் விரைவில் அழிவை நாடிச் செல்லும் என்று யான் இங்கே கூறவேண்டாம்.

## தமிழகம் பிளந்து கிடக்கின்றது

தமிழர் அரசியல் கட்சிகள் (திராவிடர் கழகங்களிரண்டு, தமிழரசுக் கழகம்,) அகில இந் திய அரசியல் கட்சிகள் (அகில இந்திய காங்கிரஸ் அகில இந்திய பிரஜா சோஷலிஷ்ட், அகில இந்திய கம்யூனிஸ்ட்,) தமிழர் புராதன இயக்கம் (அருள் நெறிக் கூட்டம்) இப்படித்தமிழகம் பல துண்டு களாகப் பிளந்து கிடக்கின்றது. இக்கட்சிகளின் நோக்கம், கொள்கை, கருத்து இவற்றின் வேற் றுமைக்காகத் தமிழர்கள் இத்தனை கூறுகளாகப் பிரிந்து நிற்கிருர்களா என்ருல், இல்லை. கட்சிகள் சிலவற்றை ஆராய்ந்தால் அருமைத் தமிழ்மக்கள் தலைவர்களுக்காகவே இருக்கிருர்களோ வென எண்ணும்படி இருக்கின்றது நிலைமை. சில தலைவர் கள் அப்பாவி மக்களை 'ஆளுக்குக் கொஞ்சம்' எனப் பங்கிட்டுக் கொண்டார்கள். ஆற்றலுடன்

துள்ளிக் குதிக்கும் இளந்தமிழ் வாலிபர்கள் 'தலைவர்கள் என்ன சொல்லுவார்கள் செய்வோம்' என்று துடி துடித்து நிற்கிறார்கள். அவர்களுக்குத் தலைவர்கள் என்ன சொல்ல இருக்கிறார்கள்!

## யான் தனி மனிதன்

தமிழகம் இந்த நிலையை அடையவேண்டுமா? தமிழர்கள் இனி யென்று ஒன்றாக இருந்து தமிழ் நாட்டின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடப் போகிறார்கள்? 'தமிழர்கள் ஒற்றுமையாக இருந்து முன்னேற்றம் காண்கிறார்கள்' என்று சொல்லும் நாள் வராதா? அந்த நாள் வரட்டும், அன்றைக்கு யான் தமிழ் மொழி பேசக் கேட்கிறேன். இடையிலே யான் தமிழ் கேட்க வேண்டாம். எனக்குப் புரியாத வேற்று மொழியே கேட்கிறேன். அது எனக்குக் காதில் நாராசமாகப் பட்டாலும், இருக்கட்டும். யான் திரும்பத் திரும்பத் தமிழகம் அலங்கோலமான நிலையில் வீழ்ந்து கிடக்கின்றது என்று அறிந்து வருந்துவதைக் காட்டிலுமா புரியாத பிறமொழிப் பேச்சு தரும் வருத்தம் அதிகப்படும்?

தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவது பற்றி யாருக்குமே அக்கறையில்லையே. யான் என்ன

செய்யக்கூடும்? யான் ஒரு தனி மனிதன். எந்தக் கட்சியிலும் சாராதவன். கட்டுப்பாட்டுடன் கூட்டாக இருந்து செயல்படும் கட்சிகளை ஒற்றுமைப் படுத்துவது இலகுவான காரியமா? தனிமனிதனுல் ஆகக்கூடிய காரியமா? யானே தமிழகத்தின் ஏதோவொரு மூலையிலிருந்து கொண்டு தமிழ்நாடு நலம் பெற வெனத் தமிழர்க்காகவே எழுதிக் கொண்டிருக்கும் ஒரு சாதாரண நூலாசிரியன்.

## தமிழர் தம் நிலை அறிதல் வேண்டும்

எதற்காகத் தமிழர் பல முனைகளில் பிரிந்து நிற்கவேண்டும் என்பதைத் தமிழர் தாமே அறிதல் வேண்டும். இதை அறிவிக்கப் பிறர் வேண்டாம். இதையறியத் தமிழர் பிறரை எதிர்பார்த்தால் அது கையறுநிலை யாகும். பல முனையில் பிரிந்து நிற்கும் தமிழர்கள் ஒற்றுமை எண்ணம் கொள்ளல் வேண்டும். பின் நம் போக்கை நேரிய வழியில், உலகம் எந்தப் பாதையில் செல்கின்றது என்பதைக் கண்டு தெளிந்து அதே பாதையில் செலுத்தவேண்டும். உலக மக்கள் இந்நேரம் என்ன செய்கிறுர் என்று பார்த்தறிந்து நாமும மதை, நல்லதானுல், செய்தல்வேண்டும் காலத்தில்.

இந்நூலை முடிக்கும் கடைசி நேரத்தில் இருக்கிறேன். "தமிழன் ஒற்றுமை தான் என்னே!

தமிழன் முன்னேற்றம் தான் என்னே! போக்கில் காலத்தின் வேகத்தையும் தமிழன் வென்று விடுவானே!" என்றெழுதி மகிழக் கூடாத நிலையில் வருத்தத்துடன் கீழே உள்ளபடி எழுதிமுடிக்க வேண்டியதாகவே இருக்கின்றது

தமிழர்கள் ஒற்றுமை காணவே மாட்டார்களா? தமிழகத்தின் முன்னேற்றத்தைத் தமிழர்கள் கருதமாட்டாரா? இப்படியே தான் தமிழர்கள் தம் போக்கு நெறியைத் தவற விட்டுவிட்டுக் கோணல் கோணலாக வட்டமிடுவாரா? காலம் ஓடுகின்றதே! தமிழர்களும் அதனுடன் இணையாக நடக்க வேண்டாமா? தமிழர்கள் அடுத்த ஆண்டில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

## தமிழர்களின் அடுத்த ஆண்டின்-
## '57-ன் நடவடிக்கை என்ன?

உத்தமபாளையம் விஜயா பிரஸில் அச்சிடப்பட்டது

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 1 | வேண்டாவேன | வேண்டாமேன |
| 7 | 13 | சிலவிட்டு | சேலவிட்டு |
| 10 | 3 | யனுசரணை | யநுசரணை |
| 11 | 10 | Karal | Karl |
| 15 | 2 | முடித்தளவுக்கு | முடிந்தளவுக்கு |
| 29 | 17 | போருமை | பேருமை |
| 34 | 13 | புலவர்வள் தான் | புலவர்கள் தாம் |
| 40 | 3 | என்ளுலும் | என்ருலும் |
| 42 | 19 | வரைக் கூடிய | வளரக்கூடிய |
| 43 | 14 | பிறமோழச் | பிறமோழிச் |
| 43 | 15 | எடுத்தாழ்கின்றது | எடுத்தாள்கின்றது |
| 43 | 23 | எடுத்தாழ்கின்றது | எடுத்தாள்கின்றது |
| 44 | 2 | மோழீயைப் | மோழியைப் |
| 47 | 3 | போருக்குகிருர் | போறுக்குகிருர் |
| 50 | 7 | மோழீ | மோழி |
| 50 | 19 | மோழீ | மோழி |
| 51 | 20 | நினைக்குந்தோரும் | நினைக்குந்தோறும் |
| 71 | 22 | வழீயில் | வழியில் |
| 81 | 5 | போருந்துவது | போருந்துவன |
| 95 | 16 | சிவர் | சிலர் |
| 103 | 23 | நிலமைளில் | நிலமைகளில் |

44 22 (விட்டுப் போனது) உலகில் வேறேதுவுமில்லை என்று பேசுகிருர். உலகிலே

## மகிழ்ச்சிக் குரிய செய்தி!

தமிழனை ஆக்க வேலைக்குத்தட்டி எழுப்பும் நோக்கம் கொண்டு **"சுதா" வை** ஆசிரியராகக்கொண்ட **மாத வெளியீடு** நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

விரைவில் வெளிவரும்.

**தமிழன் வளர்ப்பு நூற்பதிப்புக் கழகத்தார்.**

அழகிய அச்சுவேலைகளுக்கு சிறந்த இடம்.

**விஜயா பிரஸ்,**

உத்தமபாளையம்.